வார இதழ்

ஆசிரியர் : மு. கருணாநிதி..

2 அணா

முரசு 2 | சென்னை | 27—5—55 | வெள்ளி | ஒலி 9

ஆச்சாரியார் தீட்டும் சக்கரவர்த்தி திருமகன் இதுவரை, 69 அத்தியாயங்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளில் 41 அத்தியாயங்களில் வந்த கதைக்கும், ஆச்சாரியாரின் அபிப்பிராயங்களுக்கும், அவ்வப்போது பதில்தரப்பட்டிருக்கிறது. ஆச்சாரியாரோ, அல்லது ராமாயணப் புலிகளோ-யாரும் மறுப்புரைக்க முன்வரவில்லை; வந்தாலும் வாதில் வெல்லமுடியாது என்பதும்—அப்படி வருபவாகளிடம் உண்மை லவலேசமும் கிடையாது என்பதும் அவர்களுக்கே தெரியும்.

நாம், நாட்டு மக்கள் உண்மை நிலை உணர வேண்டுமென்பதற்காகவும்-ஆச்சாரியாரின் வாதங்களிலே எவ்வளவு கோணல் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவும் — மீண்டும் "சக்கரவர்த்தியின் திருமகனை"த் தொடருகிறோம். 42 லிருந்து 69-ம் அத்தியாயம் வரையிலுள்ள கட்டுரைகளை மொத்தமாக இரண்டொரு வாரங்களில் விமர்சனம் செய்துவிட்டு, பின்னர் அவ்வப்போது தொடர்ந்து எழுதுவோம்.

ராமனின் பாதரக்ஷைகளைத் தூக்கிக்கொண்டு, பரதன் சித்ரகூட மலையிலிருந்து புறப்பட்டான். ராமர் கோஷ்டியினர் தண்டகாரண்யத்திலே வேறு இடம் பார்ப்பதற்காக சித்ரகூட மலைச்சாரலை விட்டுப் புறப்பட்டனர். தண்டகாரண்யத்திலே பத்து வருடங்கள் அவர்கள் எந்த இடையூறுமின்றி சுகமாக வாழ்ந்தார்கள். அதற்கு முன்பு அகஸ்தியரை தரிசிப்பதற்காக டான். இந்த இடத்திலே, அகஸ்தியருடைய பெருமைகளைப் பற்றி, ஆச்சாரியார் வர்ணிக்கிறார், பாருங்கள்:

'வாதாபி, இல்வலன், என்ற இரண்டு அரக்கர்கள் ரிஷிகளை மிகவும் தொந்திரவு செய்து வந்தார்கள். வாதாபியின் உடலை எவ்வளவுதான் வெட்டித் துண்டு செய்தாலும், மீண்டும் ஒட்டிக்கொண்டு உயிர்வந்துவிடும்; இப்படி ஒரு வரம் பெற்றிருந்தான் அவன். இல்வலன் என்பவன் ரிஷிகளை வீட்டுக்கு 'சிரார்த்த போஜனம்' என்று கூறி அழைப்பான்—அழைத்தால் போய்த்தீர வேண்டும். வாதாபி, ஆடாக மாறுவான். ஆட்டை வெட்டி இல்வலன் போஜனம் பரிமாறுவான். ரிஷிகள் வயிறு புடைக்க சாப்பிடுவார்கள். சாப்பிட்டானதும், இல்வலன், "வாதாபீ!" என்று கூப்பிடுவான். பிராமணரின் வயிற்றுக்குள்ளே ஆட்டு மாமிசமாகப் பெற்று அவரது வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். பிராமண ரிஷி செத்து மடிவார். இப்படிப்பட்டவர்கள், அகஸ்தியரை அழைத்து விருந்து வைத்தார்கள். வாதாபி, அகஸ்தியர் வயிற்றுக்குள் மேஷ மாமிசமாகப் பிரவேசித்தான். சாப்பிட்டானதும், இல்வலன் வழக்கம்போல் 'வாதாபீ' என்று கூப்பிட்டான். ஆனால் அகஸ்தியர், வாதாபியை தன் வயிற்றுக்குள் ஜீரணித்து விட்டதோடு, இல்வலனையும் எரித்து விட்டார்."



ராமாயண நாடகத்திலே, முனிவர்கள் மாமிசம் சாப்பிட்டார்கள் என்று நடித்துக் காட்டினால், சீறி விழும் சிறியவர்கள்— இந்தப் பெரியவர் எழுதும் உண்மைகளை எப்படி மறுக்கப் போகிறார்கள்என்று தெரியவில்லை. பிராமண ரிஷிகள் ஆட்டு மாமிசமாக மாறி அவர்கள் வயிற்றுக்குள் புகுந்து அவர்களைக் கொலை செய்திருக் சூழ்ச்சி கலந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாதவர்கள் திரிகால முனைரும் ரிஷிகளாயிருந்தார்கள் என்பது எப்படிப் பொருத்தமாகும்? வலுக்கட்டாயமாக அழைத்துப் போய் சாப்பிட வைத்தார்கள் என்று கூறினாலும், வாதாபியை அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்த அகஸ்தியர், தன்னை அவர்கள் அழைக்கும் போதே புரிந்து கொண்டு இருவரையும் எரித்திருக்கலாமே—என்று தானே கேட்கத் தோன்றுகிறது! அப்படி அவர்களை அழிக்காமல்— மேஷ (ஆடு) மாமிசம் என்ற பெயரால நரமாமிசம் (அவர் தம் பாஷைப்படி ராக்ஷச மாமிசம்) சாப்பிட்டு அதையும் ஜீரணித்துக் கொண்டார் என்பதிலிருந்து, அக்காலத்து ரிஷிகள் மனித மாமிசம் சாப்பிடவும் அஞ்சுபவர்கள் அல்ல என்று தானே தெளிவாகிறது!

போகட்டும் — அத்தகைய அகஸ்தியரை ராமன் தரிசித்தான். ராக்ஷசர்களை அழிப்பதற்காக தண்டகாரண்யம் போகிறேன் என்று கூறினான். உடனே அகஸ்தியர் அவனிடம், "மகா விஷ்ணுவுக்காக விஸ்வகர்மா செய்த வில்லும், என்றும் குறையாத அம்புத் தூணியும், கத்தியும் தந்தார். ராமனே! ராக்ஷசர்களை ஒழிப்பாயாக! முன் மகா விஷ்ணுவானவர் இந்த ஆயுதங்களைத் தந்தார். நீயும் இவற்றைத் தரித்து அவர்களை ஒழிப்பாயாக! என்று ஆசிர்வாதம் செய்தார்."

முரண்பாட்டைக் கவனியுங்கள். மகாவிஷ்ணுவின் அவதாரம் ராமன் என்று சொல்லப்படுகிறது. ராமன், கடவுள் அவதாரம் அல்ல என்று கூறிய ஆச்சாரியாரே, மீண்டும்—ராமன் அவதார புருஷனே என்று வலியுறுத்தினார். இப்போது குழப்ப ஆரம்பித்திருக்கிறார்!

முரசொலி

மூடுபனி



மேகலா!

முகராத முல்லையே!

ஓடி வந்தேன் உன்னைக் காண—வழக்கம்போல், ஆடிப்பாடி வரவேற்பாய்-வந்து என் சிந்தையைக் குளிரச் செய்வாய் – உன் தளிர்க் கரங்கள் என்னைத்தழுவும்-வேல் விழியால் என் இதயத்தை புண்ணுக்கி, சொல்லேத் தேனுக்கி, என்னை 'அத்தான்' என்று முத்துப் பற்களைக்காட்டி அழைப்பாய்—முத்தமழை பொழிவோம்- என்று எண்ணி வந்த எனக்கு துன்பத்தை துணைக்கு விட்டு விட்டு நீ ஓடி ஒளிந்துகொண்டாய், துளியும் இரக்கமின்றி! "என்னை சந்திக்க முயலாதீர்-உன்னை நம்பி பாழாக்கிக் கொள்ள இருந்தேன் என் வாழ்வை-குளிர்மலர் சோலை என்றெண்ணி வெந்தணலில் விழ இருந்த நான்—நல்லகாலம்—தப்பிக் கொண்டேன். ஒப்பில்லாத மாணிக்கம் என்று நினைத்துக் கொண்டிருந்த என்னை குப்பையிலே வீசி எறிந்து விட்டீர்; போதும் நம் உறவு—இன்றோடு முடிந்து விட்டது நம் உறவும்"—என்று பேசிய உன் கடிதத்தை—கடிதமா அது-இல்லை இல்லை-என் சாவோலையைக்கண்டு துடித்தது என் உள்ளம். திடீரென்று வீசி விட்டாய் வெடிகுண்டை என் வாழ்வில். சேல்விழியால் என் விலாவில் கொத்திக்கொத்தி விளையாடிய நீ, இன்று வேலைச் சொருகி விட்டாய் என் இதயத்தில். கொஞ்சிக் கொஞ்சி காதல் கீதம் இசைத்த என் அஞ்சுகமே! கொஞ்சமும் இரக்கமின்றி நெருப்பைக் கொட்டி விட்டாய் என் நெஞ்சில்! பேசும் நிலாப் பதுமையே! நீ பேசாமடந்தை ஆனது ஏன்? வாசப் புது மலரே! இதழ் விரித்து மணம் வீச வேண்டிய நீ, மௌனம் சாதிப்பதேன்? தவறு என்ன செய்தேன் நான்? குற்றம் என்ன கண்டாய் என்னிடத்தில்? பொற்கொடியே! சற்றே பதில் சொல்!

இதயமே!

உதய நிலவே!

காலமெல்லாம் வாழ்க்கையில் போராடிப் போராடி—தோல்வி மேல் தோல்வி கண்டு—சலித்துப் போன என்னிடத்தில் வலிய வந்து பேசினுய்! கண்ணிமையின் கடைக்கூட்டால் என்னை அழைத்து—கனியிதழின் வண்ணத்தால் என்னை மயக்கி—'மண்ணுலகில் உன்னையன்றி வேறு ஒருவரைத்தொடேன்' என்று பல முறை உன் பவழ இதழ் திறந்து செந்தமிழை தேனில் குழைத்து, என் சிந்தை-அணு—எல்லாம் சிலிர்க்க சொந்தம் பாராட்டிய நீ, இன்று என் வாழ்வில் தீப்பந்தத்தை வீசிவிட்டாய்... "ஜமீன்தார் தோட்டத்திலே காய்த்த மாங்கனி நீ, பூங்குயிலே! அந்தஸ்தென்ற அரணும், பணம் என்ற முள்வேலியும், கௌரவம் என்ற காவலும் உன்னைப் பறிக்க முடியாதபடி தடுக்குதடி" என்றேன் நான்—'மாங்கனியே உன் காலடியைத் தேடிவந்தால்......' என்று பதில் உரைத்து என் பதிலுக்குக் காத்திராமல் என் விழிவழியே புகுந்து என் இதயத்தில் குடிபுகுந்தாய்... இன்று தேடி வந்தால் ஓடி ஒளிந்தாய். பணம் படைத்தவர்களிடம் குணம் இருக்காது என்பதை உண்மையாக்கிவிட்டாயே! உன் செல்வச் செருக்கால்-அந்தஸ்து அகங்காரத்தால் — என் வாழ்வு மலரை கசக்கி விட்டாய்.

துன்பத்தையே என் வாழ்வின் தொடர்கதையாக கொண்டிருந்த நான், உன் அன்பிலே, புன்னகையிலே, அரவணைப்பிலே இன்பத்தை காண்போம் என்று எண்ணியிருந்த என் வாழ்வில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டாய்! உன் கையால் வரைந்த காதல் ஓவியத்தை நீயே அழிக்கிருயே—நீ தொடுத்த மலர்மாலையை நீயே பிய்த்தெறிகிருயே-இது முறையா? நீதியா? நியாயமா?

என்னுயிரே!

கன்னல்சாறே!

மின்னல்போல் தோன்றி மறைவதற்கா என்மேல் அன்பை அள்ளி அள்ளிச் சொரிந்தாய்? 'இன்னல் எது வந்தாலும்-இன்னுயிர் நேர்! நான் உன்னைப் பிரியேன்'-என்று என்நெஞ்சுகுளிர உரைத்த நீ, இன்று நஞ்சிலே பேனவை தோய்த்தெடுத்து 'நம் உறவு முறிந்து விட்டது' என்று வரைந்து விட்டாய். 'உன்னை நம்பி பாழாக்கிக்கொள்ள இருந்தேன் என் வாழ்வை-மின்மினியை விண்மீனென்று ஏமாற இருந்தேன்-நல்லகாலம் - தப்பித்தேன்' என்று என் மேல் பழியை சுமத்தியிருக்கிருய். அடி பாவி! உன்னை நம்பி நானல்லவா நாசமாக்கிக் கொண்டேன் என் வாழ்வை! உன் பளிங்கு மேனி என்னைப் பரவசமாக்கியதுண்டு – பைத்தியமாக்கியதில்லை. கதை பேசும் உன் கண்கள் என்னைக் கவர்ந்ததுண்டு – கலங்கடித்ததில்லை. போதை ஊட்டும் உன் பவழ இதழ் என்னை மெய் மறக்கச் செய்திருக்கிறது — மயங்கியதில்லை. உன் துடி இடை-கனிமொழி-பளிப்பார்வை - என்னை இன்பபுரிக்கு அழைத்துச் சென்றிருக்கிறது; ஆனால் என்னை அடிமையாக்கியதில்லை. உன் இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்ததே ஆசை-அன்பு—பாசம்— அதுதான் என்னை அடிமையாக்கியது உனக்கு. உன் மேனிஅழகும்—மயக்கும் சிரிப்பும்— கொஞ்சும் பேச்சும் என் நெஞ்சிலே இடம் பெறவில்லை. உன் தூய அன்புதான் என் இதயத்தைக் கவர்ந்தது.

'அன்பு செய்தோன் — சாதல் அடைந்தான்' என்ற இலக்கணத்திற்கு என்னை இலக்காக்கி விடாதே! குமுறும் எரிமலை திடீரென்று ஒரு நாள் வெடிப்பது போல், வேதனையும் வாட்டமும் நிரம்பியுள்ள என் இதயமும் வெடித்துவிடும். என் இதயத்தை கிழித்துப் பார் — உன் எழிலுருவம் நிழலாட்டம் போடுவதைக் காண்பாய். அழுது அழுது, புழுப்போல் துடித்து, மடியத்தான் வேண்டுமா? காலமெல்லாம் காத்திருப்பேன் கண்ணழகி, இந்தக் காசினியில்; உனக்காக அல்ல-உன் அன்புக்கு-பாசத்திற்கு-பிரியத்திற்கு. பணம் என்ற பட்டுத் திரைக்குப் பின்னல் இருக்கும் உனக்கு இந்தப் பரிதாப குரல் கேட்காது! அந்தஸ்து போதையில் மயங்கி இருக்கும் உனக்கு இந்த அனுதையின் அவலக் குரல் எங்கே கேட்கப் போகிறது! உன் கண்களை மறைத்திருக்கும் மூடு பனி விலகியதும், என்னை-என் உள்ளத்தை—கள்ளமில்லா என் நெஞ்சை — குருதி கொட்டும் என் இதயத்தை நீ புரிந்து கொள்வாய். உன் தவறை உணர்வாய்! சஞ்சலமே; உன் மறுபிறப்புதான் பெண்ணின் வடிவம் என்பது உண்மைதானு?

என்றும் உன்,

அத்தான்.

✶

வண்டுமனம் கொண்டவரே!

உண்டு மயங்கியிருக்கும் மண்டு கமல்ல நான், உமது காவிய ரசம் சொட்டும் கடிதத்தைக் கண்டு ஏமாற! உமது முகத்திரை கிழிந்து விட்டது; உண்மை வடிவம் வெளியாகி விட்டது என்று தெரிந்து கண்ணீர் வடித்திருக்கிறேன்; பழியை என்மேல் சுமத்தியிருக்கிறீர்! இனியும் என்னை ஏமாற்ற முடியாது. 'அன்பே-ஆருயிரே — இன்பமே-இன்னுயிரே' என்றெல்லாம் அழைத்தவளை-அன்பை எல்லாம்உம்மேல் சொரிந்தவளை 'இந்த தேகம் உமக்கே சொந்தம்' என்று உம்மிடம் ஒப்படைத்தவளைத் தான் ஏமாற்றிவிட்டீர். நாசமாக்கி விட்டீர், என் நம்பிக்கையை! கலைத்துவிட்டீர் என் ஆசைக் கனவை! என் வாழ்வு சித்திரத்தை அழித்தே விட்டீர்!

"அத்தான்-அத்தான்" என்று உம்மை சுற்றி சுற்றி வலம் வந்தவளை "செத்துப் போ" என்றே கூறுமல் கூறிவிட்டீர். வேஷம் வெளிப்பட்டதும் சுமத்துகிறீர் பழியை எனமேல்! தவறு செய்தவர்கள் யாரும் ஒத்துக்கொள்வதில்லை. நீர் மட்டும் என்ன-அந்த நீதிக்கு விதிவிலக்கா? பணமென்ற போதையில் நான் மயங்கியிருந்தால் உம்மீது என் அன்பை அள்ளித் தெளித்திருக்க மாட்டேன். அந்தஸ்துக்கு நான் அடிமையாகியிருந்தால் குடிசையில் குமுறும் உன்னை, மாடி விட்டு மனைகரியின் இதயக் கோயிலில் குடி ஏற்றி நித்தம் நித்தம் பூஜை செய்திருக்க மாட்டேன். சேற்றிலிருக்கும் செந்தாமரை பணக்காரஇல்லங்களிலே மணம் வீசாதா? சிப்பி வயற்றிலே இருக்கும் முத்து உப்பரிகையிலே உலவும் உல்லாசிகளின் கருத்தை அலங்கரிப்பதில்லையா?-என்றெல்லாம் எண்ணித்தான் என் ஆசையை எல்லாம் உன்மேல் வைத்தேன்; மோசம் செய்து விட்டீர்! 'அன்பு செய்தாள்; துன்பக் கடலில் விழுந்தாள்' என்றுதான் ஆகிவிட்டது என்வாழ்வுக் கதை. என் வாழ்வே கதையாகிவிட்டது. சஞ்சலத்தின் சொந்தக்காரர்கள் நாங்கள் அல்ல; ஆண்களே சபலத்தின் அடிமைகள்!

உமக்கு ஒன்றும் இல்லாத,

மேகலா

✶

கண்ணே!

தமிழ்ப் பண்ணே!

சந்தேகம் என்கிற மூடுபனி உன்னை மறைத்திருக்கிறது. சந்தேகம் சங்கடத்தின் ஆரம்பம். சந்தேகம் ஒரு தொத்து நோய். அதை உடனே கவனித்து சிகிச்சை செய்யாவிட்டால் புரையோடி வாழ்வையே பாழாக்கி விடும். சபலத்தின் அடிமை நானல்ல, என் சாகா மருந்தே! உன் சந்தேகத் திரையை கிழித்து என்னைப் பார்!

என்றும் உன்,

அத்தான்.

✶

மந்தி மனம் படைத்தவரே!

அந்தி நேரத்து குரூடி அல்ல நான். மூடுபனி என்னை மறைக்கவில்லை. இத்தனை நாள் மோக மேகம்தான் உமது உண்மை உருவம் தெரியாதபடி என்னை மறைத்திருந்தது. மோகனத் திரை கிழிக்கப்பட்டது—உன் மோக லீலைகள் வெளிப்பட்டன. யாராவது சொல்லியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேன். நானே-என் கண்களால் கண்ட பின்தான் உண்மையை என்னுல் புரிந்து கொள்ள முடிந்தது. அதற்குப் பின்தான் நான் ஒரு முடிவுக்கு வந்தேன்—உமது தொடர்பை துண்டித்துக் கொள்வதென்று. நேற்று மாலை 'சினிமாவுக்கு போவோம்' என்றேன். "எனக்கு வேலையிருக்கிறது" என்று பசப்பி விட்டு அவசர அவசரமாக போய்விட்டீர். நான் உலாவ கடற்கரைப் பக்கம் போனேன். உமது 'அவசர வேலை'யும் எனக்குத் தெரிந்தது. நீர் ஒரு பெண்ணை தோளில் சாய்த்துக் கொண்டு—காரிலே அவ்வழியே போனீர். நான் மூர்ச்சித்து விழாமலிருந்ததுதான் ஆச்சரியம். இதயம் அழ அழ வீடுவந்து சேர்ந்தேன். இன்னமும் என்ன வேண்டும் உமது வண்டுமனத்தை விளக்க! என் வாழ்வுச் சோலையை பாலைவனமாக்கிவிட்டீர்! துரோகி! பாசத்தையெல்லாம் உம்மேல் கொட்டியவளின் வாழ்வை சுட்டு எரித்து விட்டீர். வஞ்சித்துவிட்டீர், வாஞ்சையையெல்லாம் உம்மீது சொரிந்தவளை. 'உன்னை சொந்தமாக்கிக் கொள்கிறேன்' என்று கூடிவிட்டு, அந்தி நேரத்தில் சந்திசிரிக்க காந்த நிகர் மேனியாளை காரில் ஏற்றிச் செல்கிறீரே, என்னிடத்தில் இல்லாததை என்ன கண்டீர் அவளிடத்தில்? நான் என்ன ஏமாளியா, இன்னமும்

தொடர்ச்சி 8-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 27—5—55 வெள்ளி

பித்தம் தெளிவீர்!

அடிமை நாட்டிலே குழந்தைகள் கற்கும் கல்விக்கும், சுதந்தரத் தரணியிலே அவர்களுக்குப் போதிக்கப்படும் கல்விக்கும் சாதாரணமாக மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுகள் இருக்கின்றன. இன்னும் வடநாட்டு ஆதிபத்யத்துக்கு நாம் வேட்டு வைக்காவிட்டாலும்கூட இன்று நம் பிள்ளைகள், நாம் அன்று படித்த வாக்கியமாம், 'ஆரும் ஜார்ஜ் நமது மன்னர் பிரான்' என்பதற்குப் பதிலாக, 'ராஜேந்திரப் பிரசாத் நமது குடியரசுத் தலைவர்' என்று படிக்கிறார்கள். பொருள் விளங்குகிறதோ இல்லையோ, 'ஜனகனமன' கீதத்தை முணகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய உபகண்டத்தின் ஆட்சி பீடத்திலே அமர்ந்திருக்கும் தேசியத் தோழர்கள் மேற்கண்ட விதத்தில் சில வரிகளை மாற்றியமைத்து விட்டதாலேயே தங்களது கல்விச் சீர்திருத்தம் முடிந்து விட்டதாகக் கருதுவதாகவே நமக்குத் தோன்றுகிறது அதுமட்டுமல்ல; ஒவ்வொரு ராஜ்யக் கல்வி அமைச்சர்களும் தாங்கள் பட்டத்துக்கு வந்தவுடன் அவர்கள் அடிக்கும் கொட்டத்தைப் பார்த்தாலே, கல்வி இலாகாவை ஏதோவொரு விளையாட்டுக் கருவியாகத்தான் அவர்கள் நினைப்பதாகவும் தோன்றுகிறது.

இத்தனை ஆண்டு காலமாக ஒரே ஒரு கட்சியின் அணைப்பிலேதான் நமது மாநிலம் இருந்து வந்திருக்கிறது. இருந்தும் அதற்குள்ளாகத்தான் எவ்வளவு மாற்றங்கள்! எவ்வளவு முரண்பாடுகள்!! ஒரு அமைச்சர் வந்தார்; இந்தியைக் கட்டாயமாக்கினார்! அவருக்குப் பின் வந்தவரோ அதை இஷ்டப்பாடமாக்கி, இறுதியில் அதன் அஸ்தி கரைப்பு விழாவுக்கும் அடிகோலிவிட்டு மறைந்துவிட்டார்! மற்றவரோ முன்பு வாலறுந்த வரலாற்றை மறந்து, திராவிடப் பெருங்குடி மக்களின் தாலியறுக்கும் குலதர்மத் திட்டத்தைப் புகுத்தினார்! அதன் பின் தோன்றிய காமராசர் அந்த திட்டத்தைக் கைவிட்ட போதிலும்கூட, ஆதாரக் கல்விக்கு ஆரத்தி எடுக்கிறார்! காங்கிரஸ் கட்சி தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளாமல், கட்சியில் அங்கம் வகிக்கும் தனிப்பட்ட மனிதருக்கான கொள்கைகளையே அவ்வப்போது உடுத்திக் கொண்டு, ஒரு ஆபாசமான காட்சியை ஏற்படுத்திக் கொண்டு, அதிலே உழலும் நிலைமையைப் பார்க்கிறோம்!

இப்போது நாட்டிலே உருவாகியிருக்கும் சூழ்நிலைகளைக் கவனித்தால், தேசியத் தோழர்களுக்கு மட்டுமல்ல; மடமை இருட்டை ஒழிக்க தீவட்டி தூக்கியிருப்பதாக வாய்ப்பறை அடிக்கும் சில பெரிய மனிதர்கள்கூட நிலைமறந்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள்!

சென்ற கிழமை கடலூரில் நடைபெற்ற 45-வது ராஜ்ய கல்வி மாநாட்டின் நடவடிக்கைகளைக் கவனித்தால், கல்வி நிலைகுறித்து நம் நாட்டிலே எவ்வளவு குழப்பங்கள் உருவாகியுள்ளனவென்பது தெற்றென விளங்கும். மாநாட்டுக்குத் தலைமை வகித்த எஸ். வெங்கட்ராமன் கல்விச் சீர்திருத்தத்திற்காக புதுப்புது திட்டங்களையும், புரட்சி கருத்துக்களையும் கொண்டிருக்கும் நல்லவர் குழாமிலே நச்சுக் காற்றை ஏவியிருக்கிறார். அவர் பேசியிருக்கிறார்; **'கல்வித் திட்டம் மத அடிப்படையிலேயே இருக்க வேண்டும்'**—என்று! தஞ்சை எஸ். எஸ். அவதான அய்யர்கூட பள்ளிகளில் மதபோதனையை எதிர்த்துப் பேசியிருக்கிறார்! இருந்தும் ஆதரவுக் குரல் கொடுக்க பீளமேடு சர்வஜ உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் தயங்கவில்லை!

மதப்பள்ளிகளிலே மதபோதனை செய்ய வேண்டுமென்று பேசப்பட்டிருந்தால் நாம் வாய்மூடி மௌனிகளாய் மாறியிருப்போம். பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து வாரி வழங்கப்படும் கல்வி அமுதிலே மதமெனும் விஷம் கலக்கப்பட வேண்டியதின் அவசியந்தான் நமக்குப் புரியவில்லை! நம்முடைய செவிகளிலே அரசியல் சட்டம் பாய்ச்சியிருக்கும் 'மதச்சார்பற்ற அரசாங்கம்' என்னும் தேன் இன்னும் வற்றியபாடில்லை. அதற்குள்ளாகவே விஷமிகளில் சிலர், மதமென்னும் தேளை தேன் பாய்ந்த செவிகளிலே ஏவி அனுப்ப நினைக்கும்போதுதான் நாம் திகைப்படைய வேண்டிய நிலைக்கு ஆளாகிறோம்!

விடுதலை பெற்ற ஏனைய கீழ் நாடுகளிலேகூட, ஜனநாயகத்தின் வாடை வீசப்படுவதா நேரத்தில், கல்வி நீரோடையிலே மதமென்னும் முதலைகள் வளர்க்கப்படவில்லை. அந்த நாட்டு அரசியல் தலைவர்களெல்லாம் பள்ளிகளை தேசிய எழுச்சிக் கூடங்களாக எப்படி மாற்றியமைக்கமுடியுமென்றுதான் யோசித்து வருகிறார்கள். இன்று அவர்கள் விடுதலைத் தாயின் அரவணைப்பிலே ஆனந்தம் கண்டால்கூட, நாளை அடிமையெனும் ஆக்கிரமிப்பு சக்தி நாட்டிலே தலைதூக்கினால், அதை முழுமூச்சுடன் எதிர்க்க வேண்டிய வலிமையை கல்வி நிலையங்களிலேயே இளம் உள்ளங்களுக்கு ஊட்டி விடுகிறார்கள்!

சுதந்தரத் தாகம் அன்னியன் ஆட்சி மறைந்துவிடுவதால் தணிந்துவிட்டால்கூட, அடிமை மனப்பான்மை மீண்டும் அண்டாமலிருக்க நாட்டுப்பற்று என்னும் 'தாகத்'தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர்களெல்லாம் உணர்ந்திருக்கிறார்கள்!

மக்களின் இதயங்களிலே கொழுந்துவிட்டு எரிந்த விடுதலைக் கனல், அங்கெல்லாம் நாட்டு நிர்மாண வேலைக்காக சேமித்து வைக்கப்படுகிறது! அதற்குப் பள்ளிகள் பாங்கிகளாகப் பயன்படுகின்றன! இங்கு நடந்ததைப் போல ஆகஸ்ட் 15-ந்தேதி இரவு 12-மணிக்கே நீர் ஊற்றி அணைக்கப்படவில்லை!

உதாரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டிலே கல்வி நிலையங்களிலே போதிக்கப்படும் பாட அட்டவணை திருத்தி அமைக்கப்பட்டது, அது சுதந்தரமடைந்ததற்குப் பின்னர்! டாக்டர் பொகோபோ கீழ்க்கண்ட பாட போதனைத் திட்டங்களை வகுத்தார். (1) பள்ளிப் புத்தகங்களிலே பிலிப்பைன்ஸ் நாட்டு பழமொழிகள், நாட்டுப் பாடல்கள் சேர்க்கப்பட வேண்டும். (2) பிலிப்பைன்ஸ் பேரறிஞர்களின் பேச்சுகள், எழுத்துகள், (3) அந்நாட்டு விடுதலை வீரர்களின் வரலாறுகள், (4) மக்களின் பழைய கால பழக்க வழக்கங்கள், (5) மேலை நாட்டுக் கலாச்சாரம் கலக்கப்படாத கிராம வாழ்க்கை பற்றிய குறிப்புகள்—ஆகியவைகளைப் போதிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அவ்வப்போது, புள்ளி விபரங்கள் எடுக்கப்பட்டு, பாட புத்தகங்களிலே சொந்த நாட்டுச் செய்திகள் எத்தனை பக்கங்களில் சொல்லப்படுகின்றன—என்று சோதிக்கப்பட்டது!

தேசிய எழுச்சியைப் பாதுகாக்க 'தேசியப் பொருளாதார பாதுகாப்புக் கழகங்கள்' நாடெங்கும் தோற்றுவிக்கப்பட்டன. நாட்டின் பொருளாதாரம் சீரடைய சுதேசிப் பொருள்களைத்தான் வாங்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்தார்கள்—விடுதலை பெற்ற பிறகுகூட! ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் 'தேசிய பொருளாதார பாதுகாப்பு நாள்' கொண்டாடப்பட்டது. அந்த நாளிலே பள்ளிச் சிறார்களெல்லாம் அந்த நாட்டு தேசிய உடைகளையே அணிந்துகொண்டு, சுதேசப் பொருள்களையே உபயோகிப்பதாக உறுதியெடுத்துக் கொள்வார்கள்!

அங்கெல்லாம் கல்வித் திட்டம் ஏற்றம் பெறும் வகையிலே அமைந்திருக்கிறது. 'கைத்தறியாளரை ஆதரியுங்கள்; சுதேசப் பொருள்களை வாங்குங்கள்'—என்று அறிக்கைவிட்டு, அமைதியாகிவிடும் அரசாங்கங்கள் அங்கில்லை!

பாட புத்தகங்களிலே விடுதலைக் கதிர்! பள்ளிக்கூடங்களிலே விவேகச் சுடர்!

—இவைதான் சுதந்தர நாடுகளின் கல்வித் திட்டம்!

மதபோதனைக்கு மகுடம் ஊதப்படவில்லை! பகுத்தறிவுக் கண்களை புராணக் கற்பனைகளால் குத்தி, குருடாக்கவில்லை!

அவர்கள் படிப்பது தெய்வங்களின் லீலைகளைப் பற்றியல்ல; தேசிய வீரர்களின் வரலாறு!

அவர்கள் உண்மையென உணர்வது பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலில் ஒளிந்து கொண்ட கண்மூடிக் கதையை அல்ல; பூமி உருண்டையென்ற விஞ்ஞானக் கருத்துகள்!

பள்ளிகளை மதபோதனைக் கூடங்களாக மாற்ற விரும்பும் பக்த சிரோன்மணிகளே! பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளைப் பாருங்கள்! பித்தம் தெளியப் பெறுங்கள்!

திரும்பிப்பார்!

கோயிலில்லா காலம்!

இன்று தென்னகத்தில் எங்கு நோக்கினும் கோவில்கள்; விண்முட்டும் கோபுரங்கள்-சர்வ சாதாரண காட்சியாகி விட்டன. ஆனல் ஒரு உண்மை தெரியுமா? சங்க காலத்தில் தமிழரசர்கள் சிவன் கோவிலேயோ, விஷ்ணு கோவிலேயோ கட்டியதாக எள் ளளவு சான்றுகூட கிடையாது!

✶

புரட்சிக்காரனின் பள்ளிப் பருவம்!

அது 1887-ம் ஆண்டு! ரஷ்யா விலே ஜார் கொடுமையின் சிகர மாக கொலுவீற்றிருந்தான். அப் போது லெனினுக்கு வயது பதி னேழுதான். அறிவு தேடும் வயது! பள்ளிச் சிறுவனக இருக் கும்போதே அரசாங்கத்துக்கு எதிரான பயங்கர இயக்கங்களில் பங்கேற்றபோதிலும்கூட, படிப்பு முடிந்த பின்னர்தான் அரசியலில் பங்குகொள்ள வேண்டுமென்னும் ஆசை இலட்சியமாக அவன் இதயத் திலே வளர்ந்துகொண்டிருந்தது.

அந்தச் சின்ன வயதிலேயே புயல் போன்ற செய்தியொன்று மோதி அவன் உறுதியை உருக் குலைக்க முயன்றது. லெனின் தன் அன்புக்கெல்லாம் பாத்திர மாகக் கொண்டிருந்த அண் ணன்—அலெக்சாண்டர் என்று பெயர் கொண்டோன்-ஜாரைக் கொலே செய்யும் முயற்சிகளில் கலந்துகொண்டானென்று குற் றம் சாற்றப்பட்டு தூக்கிலேற் றப்பட்டான்! தமையனிடத்தில் தன் உயிரையே வைத்திருந்த லெனினுக்கு இதைவிட வாழ்வு குலேக்கும் செய்தி வேறென்ன வேண்டும்?

எப்படியோ கஷ்டப்பட்டு லெனின் அந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டான். "தனிப் பட்ட மனிதர்களின் பயங்கரச் செயல்களினல் சுதந்திரத்தை வெல்ல முடியாது. பொது மக்கள் அனைவரும் பங்கு கொள் ளும் ஒரு இயக்கம்தான் அதைப் பெற முடியும்"—என்று கூறு வானும்.

பல்லேக் கடித்துக் கொண்டு லெனின் பள்ளி வாழ்க்கையை ஓட்டினன். அது மட்டுமா? 'ஸ்கூல் பைனல்' பரிட்சையிலே முதல் மார்க்கும் பெற்றன்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாட்டின் முதுகெ லும்பாக—தொழிலாளர் இயக் கத்தின் தூணக வளர்ந்துவிட்ட லெனினின் பள்ளிப்பருவம் இப் படித்தான் வேகம் பொருந்திய தாக அமைந்திருந்தது. ஏதோ ஒரு நாவலே படித்து முடிப்பது போலத்தான் ஒப்புக்காக-உல கத்தார் மதிக்கிருர்களே என் னும் போலி கௌரவத்திற்காக —அவன் பள்ளிப் பருவத்தைக் கடத்தினன்.

★

சக்கரவர்த்தி......

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

விஷ்ணு அவதாரம் எனப் படும் ராமனிடமே, "இந்தா; இது விஷ்ணு கொடுத்தது" என்று சொல்லி, வில்லேயும் அம்பையும் அகஸ்தியர் கொடுக் கிருர். ராமன் யார் என்று திரிகால முணரும் தேவ ரிஷி அகஸ்தியருக்கே தெரியவில்லே யென்றல் இது பெரிய அதிச யம்தானே!

44-வது அத்திடாயத்தில் அகஸ்தியரைப் பற்றிக் கூறும் போது 'வரப்போகும் விஷயங் களேயும் அறிந்தவர் அந்த முனி வர்' என்று கூறுகிருர். அப்பேற் பட்டவர் ராமனிடம், "இந்தா விஷ்ணு தந்த வில்!" என்று கூறுகிருர் என்றல், வேடிக்கை யாகத்தானே யிருக்கிறது.

பஞ்சவடி ஆஸ்ரமத்திலே, சூர்ப்பனகை வருகிருள். வால் மீகி, சூர்ப்பனகையை சுய உரு வத்துடன் அறிமுகப் படுத்து கிருராம். கம்பர், சூர்ப்பனகை அழகிய மங்கை போல வந்து ராம லக்ஷ்மணரை ஏமாற்ற முயன்றதாக மாற்றி அமைத் திருக்கிருராம். இந்த இடத் திலே ஆச்சாரியார் கம்பரை மிகவும் பாராட்டுகிருர். வால் மீகி எழுதியுள்ள கட்டம் அவ ருக்கே சங்கடமாக இருக்கிறது போலும்.

காம தாகத்தால் பேசும் சூர்ப்பனகையைப் பார்த்து ராமன், "அழகியே! என்னேக் குறித்து ஆசைப்படுவது உனக் குத் துன்பமாகும். இந்தப் பெண் — என் மனேவியானவள் கூட இருக்கிருள். இரண்டு மனேவிகள் வியாபாரம் தொந் தரவுக்கு இடமாகும். இது உனக்குத் தெரியுமல்லவா? இதோ இருக்கிருன் என்னு டைய தம்பி. தனியாக இருக் கிருன். அழகிலும் பலத்திலும் எனக்குச் சமம். இவன் உனக் குத் தகுந்த புருஷன். இவனேக் கேட்டுப் பார். என்னே விட்டு விடு" என்கிருன். லட்சுமணனி டம் அவள் போனதும், அவன், "நீ அண்ணனுக்கே இரண்டாந் தாரமாகப் போ—சீதைக்காகப் பயப்படாதே! ராமன் காதல் உன் பேரில்தான் வேகம் கொள்ளும்-சீதையை அலட்சியம் செய்து விடு வான். நீ சுகமாக இருக்கலாம்" என்று ராமனிடம் திருப்பி அனுப்புகிருன்.

ராமனும் லக்ஷ்மணனும் அவ தார புருஷர்கள்—உத்தம புத் திரர்கள்—தீய பேச்சுக்களே பேசாதவர்கள்—சற்குண சீலர் கள்—என்றெல்லாம் ஆச்சாரி யார் புகழ்கிருர். அப்படிப் பட்ட புருஷரத்தினங்கள்-அது வும் அண்ணனும் தம்பியும் ஒரு பெண்ணிடம் இவ்வளவு தகாத முறையிலே நடந்து கொண்டிருக்கிருர்கள். இதனல் தான் ஆச்சாரியார் சூர்ப்ப னகை வரும் கட்டத்தை கம்பர் அழகாக எழுதியிருக்கிருர் என் கிருர். இதற்கு என்ன பொருள்? ராமனும் அவன் தம்பியும் "ரசாபாச"மான முறையில் நடந்து கொண்டதை வால்மீகி மறைக்காமல் கூறுகிருன்; கம்பர் மறைத்திருக்கிருர் என் பது தானே!

வால்மீகிக்கும் ஆச்சாரியார் "சப்பைக் கட்டு" கட்டுகிருர் பாருங்கள்:

> "ஒரு பெண்ணே, அதிலும் காதல் கொண்ட பெண்ணே, இப்படியெல்லாம் வேதனே செய்யலாமா என்று சில மேதாவிகள் கேட்கலாம் எதிரில் ஒரு விகார சொரூ பத்தை வைத்துக் கற்பனே சக்தியைப் பயன் படுத்தி னல் அவ்வாறு கேட்க மாட் டார்கள்"-இது ஆச்சாரியா ரின் சமாதானம்.

விகார மிருக சொரூபமாக ஒரு பெண் வந்தால், அவளே விட்டு விலகிப் போவார்களே தவிர, அவள் காதல் கொண்ட தாகக்கூறினல் முடியாதுஎன்று கூறி விட்டுப் போய் விடுவார் களே தவிர, "அண்ணனிடம் போ" என்று தம்பியும், "தம்பி யிடம் போ!" என்று அண்ண னும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு, அதுவும் பக்கத்திலே மனேவி யையும் வைத்துக் கொண்டு, கேவலமான பரிகாசத்தில்—நல்ல உணர்ச்சியுள்ள எந்த ஆண்மக்களும் இறங்க மாட் டார்கள். ஒரு வேளே, ஆரியக் கலாச்சாரத்தின்படி வேண்டு மானல்—ஆச்சாரியாரின் சமா தானம் பொருத்தமாக இருக் கலாம்.

(தொடரும்)

★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 10 ★



துறவு

பி. சி. கணேசன், [பி. எஸ். சி.; பி. டி.

அமாவாசை இரவு. நீல விதானத்தில் நித்திலம் பதித்ததுபோல் தாரகைகள் மின்னிக்கொண்டிருக்கின்றன. சித்தார்த்தனின் மாளிகை. அங்கு, நாட்டியம், இசை வல்ல எழில் மங்கையரெல்லாம் ஆடி அலுத்தும், பாடிக்களைத்தும் படுத்துறங்குகின்றனர். பளிங்கு அறையில், தங்கக் கட்டிலில், சித்தார்த்தன் மனைவி யசோதராவும், குழந்தை ராகுலனும் உலகை மறந்து மோகன நித்திரையில் ஆழ்ந்து கிடக்கின்றனர். எங்கும் பயங்கரமான அமைதி. மலர் மணம் தாங்கிவரும் தென்றல் மெல்லென வீசுகிறது. சிந்தனையில் மூழ்கிக் கிடந்த சித்தார்த்தன் முடிவுக்கு வந்தவன்போல் எழுகிருன்; அவன் முகம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

★

"சித்தார்த்தா நில்;எங்கே போகிருய்?"

"யார் என்னை அழைப்பது?"

"யாரா? ஆகாகா...... [சிரிப்பொலி] அழகு மனைவி, அன்புக் குழந்தை, அரசபோகம் இத்தனையும் வெறுத்து, தள்ளாத வயதில் தரணியாளும் பொறுப்பைத் தந்தையிடம் விட்டு விட்டு, நள்ளிரவில் தனிமையை நாடிச் செல்லும் உன்னைத் தடுத்து நிறுத்த, என்னைத் தவிர யாருக்குச் சக்தி இருக்கிறது?"

"ஏதோ புதிய குரலாக இருக்கிறதே! என்னிடம் இவ்வளவு உரிமையும் உறவும் கொண்டாட நீ யார்?"

"என்னை ஏன் கேட்கிருய், சித்தார்த்தா? யோகியாக நீ மாறிவிடுவாய் எனப் பயந்து, போக மாளிகையில் உன்னை சிறைப்படுத்தி வைத்திருக்கும் உன் தந்தை சுத்தோதனனைக் கேள்! அதோ, வாழ்க்கையை உன்னிடம் ஒப்படைத்துவிட்டு, வரப்போகின்ற பயங்கரத்தைப் பற்றிக் கவலையே இல்லாமல் சலனமற்று உறங்கும் சௌந்தர்ய தேவதை-உன் மனைவி யசோதராவைக் கேள்; நான் யாரென்று! உன் இல்லறத்திலிருந்து சிதறிய இன்பத் துளி—ராகுலனைக் கேள்; சித்தார்த்தா! அவர்கள் கூறுவார்கள், நான் யாரென்று"

"வாழ்க்கைத் தொடர்பை அறுத்துவிட்டுச் செல்லும் என்னிடம் புதிர் போட்டுப் பயனில்லை. என் பயணம் பெரியது, அப்பா! பிணி, மூப்பு, சாக்காடு, பித்தலாட்டம்-இவற்றிலிருந்து மானிட சமுதாயத்துக்கு மருந்து தேடப் புறப்பட்டிருப்பவனிடம், இந்த மயக்கு மொழிகள் பேசிப் பயனில்லை! நான் வருகிறேன்...!"

"சித்தார்த்தா, நில்; அவசரப்படாதே. ஆடலழகிகளின் ஆனந்த நடனம்—செங்காந்தள் நிகர் விரல்கள் சிவந்துபட யாழிலே பண்ணிசைக்கும் மகளிர்—அவர்களது இசை இன்பத்திற்கு இலக்கணம் வகுத்துக் காட்டும் எழிற் சோலை—அதன் மத்தியில் உன் தந்தை அமைத்துக் கொடுத்திருக்கும் இன்ப மாளிகை—இவைகள் உன் உள்ளத்தைத் தொடாதது விந்தையல்ல! ஆனுல், உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் கடமை என்ற ஒன்று இருக்கிறது; அதை மட்டும் மறந்துவிடாதே!"

"கடமை! [ஏளனச் சிரிப்பு] அதனுல்தானப்பா இவ்வளவு கவலை! நீ சொன்னவைகளெல்லாம் என் கடமையை நான் காண முடியாமல் மறைத்து நின்ற மாயத் திரைகள். இன்றுதான் அவைகள் பூரணமாக விலக்கப்பட்டு, நான் என் கடமையைத் தெளிவாகக் காணுகின்றேன்..."

"குழப்பமான பேச்சு இளவரசே! எது கடமை? அரச குலத்தில் பிறந்து, அவனியாளும் பொறுப்பை ஏற்று, அன்பு, அறம், அமைதி நாட்டில் நிலவச் செய்ய வேண்டிய நேரத்தில், அரசியல் கடமையை மறந்து ஓடுவதுதான் விவேகமா? வயோதிகத் தந்தையைப் புத்திர சோகத்தில் ஆழ்த்திவிட்டு, வறட்டு வேதாந்தியாக வாழ்நாளைக் கழிக்கப் புறப்படுகிருயே, அதுதான் உன் நீதியா?

அல்லது கட்டிய மனைவியைக் கண்ணீர் வடிக்க விட்டுவிட்டு, அவள் கண்ணுறங்கும்போது, காடேகப் புறப்படுகிருயே, அதுதான் நீ உலகுக்குக் காட்டப்போகும் இல்லற முறையா? உன்னுடைய இல்லறப் பொய்கையில் மலர்ந்த செந்தாமரையை – ராகுலனை–தந்தையற்ற தனயனுக்கிவிட்டுத் தனிமையில் இன்பங்காணப் புறப்படுகிருயே, அதுதான் வருங்காலத் தந்தைகளுக்கு நீ வகுத்துக் காட்டும் வழியா? வெட்கம் சித்தார்த்தா; வெட்கம்!"

"வெட்கமல்ல அப்பனே! உன் பேச்சுத்தான் எனக்குப் பெரும் வேதனையாக இருக்கிறது. நான் எனக்காக மட்டும் வாழ விரும்பினுல், உன் உபதேச மொழியை அப்படியே ஏற்றுக்கொண்டிருப்பேன். மனித இனத்தோடு எனக்குள்ள தொடர்பு குறுகிய குடும்பத்துக்குள்ளே அடைபட்டு விடுவதல்ல; என் கவலை ஒரு சுத்தோதனர், ஒரு யசோதரா, ஒரு ராகுலனைப் பற்றி மட்டுமல்ல; அல்லது ஒரு அரசாங்கத்தையே சார்ந்து நிற்பதுமல்ல; நான் காண விழைகின்ற உலகத்தில், கணவன் — மனைவி, தந்தை — மகன், குரு — சீடன் போன்ற உறவுகளோடு மட்டும் கடமை நின்றுவிடாது. அந்த உலகம் இப்பொழுதுள்ளது போல், ஆசையை அல்ல; ஆனுல் அறத்தை அச்சாணியாகக் கொண்டு சுழலும். ஆணவத்தைப் பரப்பும் மதத் தரகர்கள், புரோகிதர்கள் அங்கே இருக்கமாட்டார்கள். அன்பைப் பரப்பும் ஆசான்களே அங்கு இருப்பார்கள். வாள் இருக்காது; வளம் இருக்கும். மக்களிடையே மதம் இருக்காது; ஆனுல் அவர்களுடைய இதயங்களிலே இதம் இருக்கும். ஆசை இருக்காது; ஆனுல் அன்பு அருகாக ஊன்றி ஆலாகத் தழைத்திருக்கும்!"

"அருமையான இலட்சியக் கனவு! அதை அடையும்மார்க்கம்...?"

"அதற்காகத்தான் இந்தப் பயணம். ஆசைகளுக்கு மத்தியில் வாழ்பவன் அழியாத உண்மைகளைக் காண முடியாது. நாடு, மனைவி, மைந்தன், பெற்ருேர் இவர்களை விட்டு நான் பிரிவது வெறுப்புணர்ச்சியாலல்ல; மனித சமுதாயம் நலனடைய வேண்டுமென்பதிலே நாட்டம் கொண்ட நான், அதன் ஒரு பகுதியாகிய இவர்களை எப்படி வெறுக்க முடியும்?"

"பின் ஏன் நள்ளிரவில் இந்தத் திருட்டு வேலை?"

"என் இதயப் பாங்கினை அறியப் பக்குவப் படாதவர்களிடம் என் கட்சியைக் கூறிப் பயன் என்ன? தந்தையிடமும், மனைவியிடமும் என் நிலையை விவரித்தேன். ஆசை அவர்களுடைய அறிவை வென்றுவிட்டது. புரிந்துகொள்ள மறுக்கிருர்கள்!"

"சித்தார்த்தா, சிந்தித்துப் பார்! இன்று இரவு நீ மக்கள் மத்தியிலிருந்து மறைந்துவிடப் போகிருய். அதற்குப் பிறகு இந்த சாக்கிய நாடு வடிக்கப் போகும் கண்ணீரைப் பற்றி நினைத்துப் பார்த்தாயா?"

"வேடிக்கையான வாதம் அப்பனே! உலகில் மக்கள் வாழ்க்கை தோன்றிய நாள் தொட்டு, கண்ணீர் வடிப்பதையே தங்கள் நித்திய கர்மமாகக் கொண்டுவிட்ட எண்ணற்ற மக்களைப்பற்றி, நாளை எனக்காகக் கண்ணீர் வடிக்கப் போகிறவர்கள் என்ருவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? தனி மனிதனுகிய நான், என்மேல் நானாகவே விரும்பித் திணித்துக் கொள்ளும் துன்பத்திற்காகக் கண்ணீர் விடப் போகின்ற மக்கள், மனித இனத்தின்மீது சுமத்தப்பட்டுள்ள பயங்கரமான தொல்லைகளினுல் கண்ணீர் விடுவோரைப் பற்றி ஏன் கவலை கொள்ளவில்லை? இந்த சூட்சமத்தைப் புரிந்துகொள்ளாதவர்கள் உலகின் நடைமுறையை உணராதவர்கள்!"

"அனுபவ சாத்தியமற்ற தத்துவங்களைப் பற்றிப் பேசும் இளம் வேதாந்தியே! உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்குக் கடமையைச் செய்யத் தவறிவிட்டு, தரணிக்குக் கடமையாற்றப் புறப்படுவதாக நீ கூறுவது, வெறும் பொய்—தன்னலம்! நிலவிழந்த வானமாகக் காட்சியளிக்கப்போகும் இந்த நாடு; ஊன்றுகோல் இழந்துத் தள்ளாடப்போகும் உன கிழத் தந்தை. அதோ, இப்பொழுதே கொம்பிழந்த கொடியாகத் துவண்டு கிடக்கும் உன் மனைவி; அவள் அருகே மயங்கிக் கிடக்கும் அந்த மலர்ச் செண்டு-இவர்களைப் பார்-ஒரு முறை பார்; பிறகு புறப்படு சித்தார்த்தா!"

★

சித்தார்த்தன் திரும்புகிருன். பைங்கொடி யசோதரா படுக்கையில் துவண்டு கிடக்கிருள், குழந்தையை அணைத்தபடி. சித்தார்த்தன் அருகில் சென்று அவர்கள் இருவரையும் அன்பொழுகப் பார்க்கிருன். குடித்த பால் கொவ்வை உதடுகளின் ஓரங்களில் வழியக் குழந்தை ராகுலன் ஒரு மோகனச் சிரிப்பு சிரிக்கிருன். நடுங்கும் கரங்களோடு, குழந்தையைத் தழுவி முத்தமிடக் குனிகிருன் சித்தார்த்தன். "ஆகாகா" என்ற வெற்றிச் சிரிப்பு பின்னுலிருந்து கேட்கிறது.

★

"வென்றுவிட்டேன், சித்தார்த்தா!"

"இல்லை; வெல்ல இருந்தாய், ஆனுல் வீழ்ந்துவிட்டாய். உன்னுடைய உண்மை உருவத்தை இப்பொழுதுதான் உணருகிறேன். பெண்ணைக் காட்டிப் பேரரசுகளை சாய்த்திருக்கிருய்; மண்ணுக்காக மக்களை மதியிழக்கச் செய்திருக்கிருய்; உலக வரலாற்றில் பல கறை படிந்த அத்தியாயங்களைச் சிருஷ்டித்திருக்கிருய். என் தூய்மையைக் கெடுத்துவிடாதே, போ! -தூர நில்! அன்புக் காற்ருல் அறவுலகு நோக்கிச் செலுத்தப்படும் இந்தத் துறவுக் கப்பலை, ஆசையென்னும் நங்கூரம் பாய்ச்சி இனி நிறுத்தமுடியாது!—போ — ஓடிப் போ...!"

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

புதையல்

மு. கருணாநிதி

24.

பாம்பு கடித்தது!

"நான் உன்னுடைய தந்தைதான்—பல வருஷகாலம் உன்னைப் பிரிந்திருந்த தந்தை நான் தான்—நீயும் உன் காதலி பரிமளாவும், நீலத்திரைக் கடலோரமுள்ள உப்பரிகையிலே நின்றிருக்கும் போது, திடீரெனத் தாக்கி திகிலுண்டாக்கிய நான், உன் தந்தையேதான்—உனக்கும், உன்னுடைய வளுக்கும் ஒரு புரியாத புதிராக இருக்கும் இந்த மர்மக் கிழவன் உன் அப்பன்தானடா மகனே! டைரிகளை எழுதி எழுதிக் குவித்து, அதே டைரியினுலேயே காட்டிக் கொடுக்கப்பட்ட உன் தகப்பன் நானேதான்—ஏராளமான திரவியம், எடு, பிடி, ஆள், அம்பு, இவைகளோடு இன்பமாக வாழ்ந்து, இறுதியில் இருக்கவும் இடமின்றி, இலங்கைக்கு ஓடி, இன்னல்கள் பலவற்றை வாழ்க்கையிலே சந்தித்த அபலைக் குடும்பத்தில் மிச்சமிருக்கும் தலைவன்—என் குலக் கொழுந்தாம் உன்னைப் பெற்றெடுத்த தகப்பன்—இதோ, ஆண்டிக் கோலத்திலிருக்கிறேனே நானேதான்!"

இப்படியெல்லாம் மாயாண்டிக் கிழவர், தன்னைத் தழுவிக் கொண்டு பேசியிருக்கக் கூடாதா என்று துரை கவலைப்பட்டான்.

பொய்க்காகவாவது 'நான் உன் தகப்பன்தான்' என்று அவர் கூறியிருந்தால் அந்த சமயம் தன்மனம் சிறிது நிம்மதி அடைந்திருக்குமே யென்று எண்ணி ஏங்கினான். ஏக்கத்தோடு ஏக்கமாக, "அப்படியானால், என் அப்பா எங்கே, எப்படி, எப்போது இறந்தார்? அதையாவது சொல்லுங்களேன்" என்று தழுதழுத்த குரலிலே அவன் கேட்டான். கிழவர், அவனைப் பரிவோடு பார்த்து—

"துரை! புண்ணுக்கு மருந்து கேள்; தருகிறேன். அதை வேலால் குத்தும்படிச் சொல்லாதே; என்னால் முடியாது!" என்றார்!

"என்ன பெரியவரே, சொல்கிறீர்கள்?"

"நீ என்னிடம் எழுதிக் காட்டிய உன் வாழ்க்கைச் சித்திரமே ஒரு சோகப் பெருவெள்ளம்—நான் வேறு உன் அப்பன் செத்த கதையைச் சொல்லி, சோகத்தை இருமடங்காக்க வேண்டுமா? வேண்டாம்—உன் தந்தை குமாரவடிவுஇறந்துவிட்டான்; அதோடு விட்டுவிடு!"

"இது என்ன பெரியவரே, போர்க்களத்திலேயிருந்து வீரனுடைய குடும்பத்திற்கு சாவுச் செய்தி வருமே—அதுபோல முடிவை மட்டும் ஒரு வரியில் கூறுகிறீர்களே!"

"ஆமாம் – குமாரவடிவின் வாழ்க்கையும் ஒரு போர்க்களந்தானே! ஆனால், அவன் வீரனாக நின்று சமர்புரியவில்லை: கோழை போல உலகத்துக்குப் பயந்து, ஒதுங்கி ஒதுங்கி நடந்து, கடைசியில் பிணமாகப் போனான்."

"தயவு செய்து என் தந்தை இறந்த விபரத்தைச் சொல்லுங்கள்! அப்பா மாண்டது, மகனுக்கும் தெரியாத ஒரு மர்மச் சுழலாகப் போய் விட வேண்டாம். நான் கவலைப் படுவேன் என்று எண்ணாதீர்கள். என் குடும்பத்திலே நிகழ்ந்த துன்பத் தொடர்கதையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் படித்தவன் தான் நான். தாயார், பாட்டி, தங்கை மூவரையும் பிணமாகப் பார்த்தவன் நான். அதனால் மனம் மரத்துப் போய் விட்டது. தந்தை இறந்த விபரத்தை நீங்கள் தைரியமாகச் சொல்லலாம்."

"கேட்க நீ தயார்! சொல்ல நான் தயாராகிக் கொள்வது கஷ்டமாயிற்றே! குமாரவடிவின் மகன் நீ. நான் அவனுக்கு நண்பன். சிறையிலும் வெளியிலும் அவனும் நானும் சேர்ந்து பழகினோம். அவன் இறந்தபோது நான் பக்கத்திலேதானிருந்தேன். 'ஏன் இறந்தான்' என்பதை வெளியிட என்னால் இயலவில்லை. நினைக்கும் போதே நெஞ்சு குமுறுகிறது. சொல்லவும் ஆரம்பித்தால்... அவ்வளவுதான் என் பாடு!"

"அடக்குவதற்குப் பதிலாக அதிகமாகத் தூண்டி விடுகிறீர்கள் ஆவலை! நீங்கள் அதை சொல்லித்தான் தீரவேண்டும்!"

"குமாரவடிவுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறமாட்டேன்; நண்பனாக இருந்த நான் துரோகியாக மாற மாட்டேன். சாவு அவனுடைய சொந்த விஷயம். வெளியிலே தெரியக் கூடாத பரம ரகசியம் அந்த சாவிலே அடங்கி யிருக்கிறது. அதை நான் வெளியிலே சொன்னால், நட்புக்கு வகுக்கப்பட்ட நல்ல இலக்கணத்தை நாசம் செய்தவர்களின் பட்டியலிலே இடம் பெறுவேன்."

"பெரியவரே - மகனிடம் தானே சொல்லப்போகிறீர்கள்; மாற்றாரிடம் அல்லவே!"

"இன்னுங் கூறப் போனால், சிறை மீண்ட பிறகு நானும் குமாரவடிவும் சேர்ந்து செய்த காரியங்கள் எத்தனையோ உண்டு. உலகத்திலே நடக்காதது எதையும் செய்து விடவில்லை. அப்படி நடக்கும் காரியங்களின் அளவை விட எவ்வளவோ குறைவானதுதான் நாங்கள் ஈடுபட்ட காரியங்கள்—ஆனாலும். இப்போது அவன் இறந்து விட்டான் என்பதற்காக அவைகளை வெளியே கூறி என் இருதயத்தில் விஷத்தை நிரப்பிக் கொள்ள மாட்டேன்"

"அவைகளையெல்லாம் சொல்ல வேண்டாம் அய்யா!—எனக்குத் தெரியும் என்னென்ன நடந்திருக்குமென்று"

"என்ன நடந்திருக்கும்?—துரை! நீ கற்பனை பண்ணுவது எனக்கும் புரிகிறது. வள்ளியம்மா, வீணாக தன் மீது சந்தேகப் பட்டதாலும், தொடர்ந்து பிடிவாதமாகப் பேசாமலிருந்ததாலும், ஒரு குடும்பத்தின் திசையே திரும்பி விட்டது என்று எண்ணியிருப்பான் குமாரவடிவு!—அதன் விளைவாக சந்தேகப் பட்டதுதான் பட்டு விட்டாள்; இனிமேல் என்ன? அவளுந்தான் சந்தேக நிவர்த்தியின்றி செத்து விட்டாள்; ஆகையால் நாம் இஷ்டம் போல் அலையலாம் என்று கண்ட பெண்களையும் வட்டமிட்டிருப்பான் என்று எண்ணுகிறாயா? அதுதான் இல்லை! பிறகு எது? மன நிம்மதிக்கு மதுவாயிருக்குமோ, என்று யோசிக்கத் துவங்குகிறாயா? அதுவுமல்ல!"

"எதுவானாலும் எனக்குக் கவலையில்லை. என் தந்தை எப்படி இறந்தார் என்ற செய்தியை மட்டும் சொல்லுங்கள், போதும்!"

"பாம்பு கடித்து இறந்தான்! போதுமா?"

"பாம்பா?"

"என்ன பாம்பு என்று கேட்கிறாயா? அதையும் சொல்லுகிறேன். நல்ல பாம்பு!"

"பாம்பு எப்படிக் கடித்தது?"

"பைத்யக்காரா, இது தெரியாது? படத்தை உயர்த்தி—பல்லை அழுத்தி—காலில் கடித்தது. பாம்பின் தலையிலேயுள்ள விஷம் பல்லின் ஓட்டை வழியாக காலில் இறங்கி, பிறகு தலைக்குப் போய்...மயக்...."

"போதும் போதும்- அய்யா பெரியவரே! பாம்பு கடித்து அப்பா இறந்தார் என்பதில் என்ன ரகசியமிருக்கிறது? அதை ஏன் இவ்வளவு மறைக்க வேண்டும்?"

"ஏது — விடமாட்டாய்போலிருக்கிறதே—"

"விட மாட்டேன்; உண்மையைச் சொல்லி விடுங்கள். பாம்பு கடித்து அப்பா இறக்கவில்லை. ஏதோ சூது நடந்திருக்கிறது. என்னிடம் மறைக்காதீர்கள்—"

"பாம்பு தானப்பா. அதுவும் சிவன் கோயில் பாம்பு!"

"சிவன் கோயில் பாம்பு! பெரியவரே-என்னை ஏன் இப்படி சித்ரவதை செய்கிறீர்கள்? அப்பா இறந்த உண்மையைச் சொல்ல முடியாதென்றால் சும்மா இருங்கள்-வீண் புதிர்கள் போட வேண்டாம்"-துரை கொஞ்சம் கடுமையாக, சோகங் கலந்த குரலில் பேசிவிட்டு அப்பால் நகர்ந்தான்.

"பார் பரிமளா-உன் அத்தானுக்கு மூக்கில் மேலிருக்கிறது கோபம்—உம், எப்படித்தான் துரையோடு குடும்பம் நடத்தப் போகிறாயோ, நீ!" என்று பரி

ளாவைப் பார்த்து கிழவர் சாவதானமாகக் கூறினர்.

புயலில் சிக்கிய நிலேயிலே யிருந்த பரிமளாவும் கிழவரைப் பார்த்து, "உங்களுக்குத்தான் என்ன, வயதான காலத்திலே இவ்வளவு பிடிவாதம்?" என்ருள்.

"வாதம்-பிடிவாதம் எல்லாம் வயதான காலத்தில்தானே வரும் பரிமளா! சொல்லக் கூடிய சங்கதியாயிருந்தால் இன்னேரம் சொல்லியிருக்க மாட்டேன்?"

இதைக் கேட்ட துரை கோபத்தோடு, "ஆமாம்—சொல்லக் கூடாத சங்கதி; அவ்வளவு கேவலமான சங்கதி இதைவிடக் கேவலமான சங்கதிகளேயெல்லாம் புத்தகம் புத்தகமாக எழுதி வெளியிட்டிருக்கிருர்கள். நடக்காத விஷயங்களே எழுதி நாலு காசு திரட்டுவதற்கென்றே நாடோடி மனிதர்கள் சிலர் கையிலே பேனு பிடிக்கிருர்கள்-இவர் என்னமோ, நடந்த விஷயத்தைச் சொல்ல இவ்வளவு பூச்சாண்டி காட்டுகிருர்!"

"அப்படியானுல் என்னேயும் நீ குறிப்பிட்ட அந்த நடுத்தெருக் கும்பலோடு சேரச் சொல்லுகிருய்யா, துரை?"

"என் அப்பாவைப் பற்றி உங்களே ராமாயணம் எழுதச் சொல்லவில்லேயே நான்; தந்தையைப்பற்றி மகனிடம் கூறுவதிலே தவருென்றுமில்லேயே; அதுவும் முழுக்கதையுமா நான் கேட்கிறேன். முடிவு அத்தியாயத்தை மட்டும் சொன்னுல் போதும் என்கிறேன்"

"வீடு விழுந்தது என்பதற்கும், விடு எரிந்தது என்பதற்கும் வித்தியாச மிருக்கிறது. விழுந்தாலும், எரிந்தாலும்—வீடு வீணுவது உண்மைதான். ஆனுல், வீடு விழுந்தது என்கிறபோது, ஏதோ பழைய வீடு காற்றிலோ மழையிலோ விழுந்து விட்டது என்று கூறிவிடலாம்; வீடு, எரிந்தது என்கிறபோது....எப்படி எரிந்தது? ஏன் எரிந்தது? வேண்டுமென்றே யாராவது கொளுத்தினர்களா? அல்லது அடுப்பிலேயிருந்த நெருப்பு காற்றில் பரவிவிட்டதா? இரவிலே விளக்கின் சுடர் தெறித்து ஓலையிலே தீப்பிடித்து வீட்டை அழித்ததா-இப்படிப் பல கேள்விகள் பிறக்கும். விழுந்ததை விட, எரிந்ததற்கு கேள்விகள் அதிகம். தொடர்புடைய சம்பவங்களும் அதிகம். குமாரவடிவின் சாவு எரிந்ததைப் போன்றது. தொடர்புடைய சம்பவங்கள் அதிகம் கொண்டது. அவைகளேச் சொல்லா விட்டால், சாவின் விபரத்தை நீயும் அறிந்து கொள்ள இயலாது. அவைகளேச்சொல்லவும் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது!"

"கடைசியாகக்கேட்கிறேன்; சொல்லப் போகிறீர்களா, இல்லேயா?"

"இது ஏது வம்பு! அதான் சொன்னேனே; பாம்பு கடித்து இறந்து விட்டான் என்று!"

"சிவன் கோயில் பாம்பு என்றீர்களே; சிவன் கோயிலுக்கு அப்பா ஏன் போனுர்?"

"சுவாமி தரிசனத்திற்காக!"

"அப்பா கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுவதே கிடையாதே; **உள்ளமே கோயில்** என்று அவர் டைரியில் எழுதி வைத்திருக்கிருரே"

"அவன் சாமி கும்பிட்டதை நான் பார்த்தேனே—சிறையிலிருந்து வந்த பிறகு தெய்வ பக்தி அதிகமாகி விட்டது அவனுக்கு!"

"ஆகியிருக்க முடியாது! ஒரு குற்றமும் செய்யாதவரை சிறையிலே மூடும்போது பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பாழுங் கடவுள்மீது அவருக்கு பக்தி ஏற்பட நியாயமில்லே!"

"பக்தி ஏற்படாமலா பாதி ராத்திரியிலே கோயிலுக்கு ஓடினுன்..."

இதைச் சொல்லிவிட்டு கிழவர் திணறினர். தடுமாறினுர். அவர் நாக் குழறிற்று.

"என்ன, பாதி ராத்திரியிலா?" என்று துரை ஆவலோடு கேட்டான். கிழவர் கனைத்துக் கொண்டார். மனதை திடப்படுத்திக் கொண்டு பேசத் துவங்கினுர். உண்மைகளேச் சொல்லி விடலாம் என்ற உறுதி பிறந்து விட்டது அவருக்கு என்பது அவரது முக பாவத்திலேயிருந்து தெளிவாகத்தெரிந்தது.

"துரை! எவ்வளவுதான் மறைத்தாலும் விடமாட்டேன் என்கிருய்; பரவாயில்லே. இந்தப் பரம ரகசியத்தை நீயும் பரிமளாவும் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் வெளியிடுகிறேன்."

"நிச்சயமாகக் காப்பாற்றுவோம் பெரியவரே - நீங்கள் கொஞ்சமும் அசைப் பற்றிக் கவலேப்படாமல் விபரத்தைக் கூறுங்கள்."

"குமாரவடிவை சிவன் கோயிலில் பாம்பு கடித்தது உண்மைதான்—அவன் அங்கேயே இறந்துவிட்டதும் உண்மைதான்-எந்தச் சிவன் கோயிலில் தெரியுமா பாம்பு கடித்தது?"

"எங்கே பெரியவரே?"

"மருங்கப்பள்ளம் சிவன் கோயில் இருக்கிறதே; அங்கேதான்!"

"என்ன?"

"ஆமாம்-உன் தங்கையின் சவம் தூங்குகிற அதே இடத்திலே தான் குமாரவடிவும் பிணமாக விழுந்தான். நடுநிசி-கோர இரவு—அந்த நேரத்தில் இந்தக்கொடுமையான நிகழ்ச்சி-நானும்கூட இருந்தேன்."

"நடுநிசியில் கோயிலுக்குப் போன காரணம்?"

"திருடுவதற்காக!"

"என்ன?"

"உனக்குத் தெரியுமா—மூன்று, நான்கு வருஷங்களுக்கு முன்பு, ஊரிலேயுள்ள சில்லுண்டி தேவதைகளின் கோயில்களிலே அடிக்கடி திருட்டு நடைபெற்ற செய்தி? கோயிலிலேயுள்ள மாரி, காளி முதலிய விக்கிரகங்கள் உருட்டப்பட்டு, அதன் கீழே புதைக்கப்பட்டிருக்கும் தங்கம், வெள்ளி நாணயங்கள் கொள்ளேயிடப்படும். விக்ரகங்களே பிரதிஷ்டை செய்யும்போது அதுபோன்ற நாணயங்களேப் புதைத்து, அதன் மீது தான் பிரதிஷ்டை செய்வார்கள். விக்ரகங்களேப் புரட்டினுல், கீழேயுள்ள நாணயங்கள் அகப்படும். எனக்கும் குமாரவடிவுக்கும் இதுதான் தொழில் சிறையிலே யிருந்து வந்த பிறகு!"

"அப்படியா?"

"ஆமாம்; அதிலென்னதப்பு? கையிலே இல்லே; கட்டவுளேக் கேட்டோம்; எடுத்துத்தர அவருக்குக் கையில்லே-நாங்களே எடுத்துக் கொண்டோம்."

"ம்-பிறகு?"

"பிறகென்ன? எங்கள் வாழ்க்கைச் செலவுகளுக்குப் போக மீதியை வாடிடும் ஏழைகளுக்குத் தந்தோம். ஒருநாள் குமாரவடிவு ஒரு திட்டம் போட்டான். அதுதான் மருங்கப்பள்ளம் சிவன் கோயில் விக்ரகத்தைப் புரட்டுவது என்பது! அதை நான் தடுத்தேன். அவன் கேட்கவில்லே. 'மாரி, காளி கோயில்களில் விக்ரகம் புரட்டினுல் கொஞ்சம்தான் கிடைக்கிறது. மருங்கப்பள்ளம் கோயில், ராஜா காலத்தில் கட்டப்பட்டது; அதனுல் அந்தச் சிலேயின் கீழே அதிகமாக இருக்கும். புறப்படு. போவோம்,' என்ருன். நான் எவ்வளவோ போராடினேன். வெற்றிபெற முடியவில்லே. 'அது சக்தியுள்ளகோயில்; விக்ரகத்தைத் தொட்டாலே வெந்து நீராகிவிட வேண்டும் - என்றெல்லாம் ஊரிலே பேசிக்கொள்கிருர்களப்பா' என்றேன். 'பார்ப்போம் அந்த சக்தியையும்' என்ருன். புறப்பட்டான். நானும் கூடச் சென்றுதானே தீர வேண்டும். சென்றேன். சிவன் கோயிலுக்குள்ளே அவன் நுழைந்தான், பூட்டை உடைத்து விட்டு! நான் வெளியிலே காவல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று "அய்யய்யோ" என அலறினன் குமாரவடிவு! உள்ளே போய்ப் பார்த்தேன். பாம்பு அவனே சுற்றிக் கொண்டிருந்தது. பாம்பை உதறிவிட்டு வெளியே ஓடிவந்தான்; 'மயக்கம் வருகிறது' என்று கத்தினுன்; கீழே விழுந்தான்; இறந்தான்!

[வளரும்]

அறிவுச் சோதனை

இயற்கை அறிவில்கூட புராணக் கற்பனை போல பல மூடநம்பிக்கைகள் உலவுகின்றன. இதோ கீழே 13-பதில்கள் தரப்பட்டிருக்கின்றன. அதில் எது தவறு, எது சரி என்று நீங்கள் பதில் தர வேண்டும்.

அவைகளோடு 10-ம் பக்கத்தில் தரப்பட்டிருக்கும் உண்மையான பதிலோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அவைகளில் 8 சரியாக இருந்தால் உங்கள் இயற்கை சாத்திர ஞானம் பெரும்பான்மையோருக்கு இருப்பதைவிட ஒருபடி அதிகம் என்று பொருள். 10-க்கு மேல் சரியாக இருந்தால் அது அபரிமிதமானது என்று பொருள்.

1. நீங்கள் பயப்படுவதாகக் காட்டிக் கொண்டால் துஷ்டமிருகங்கள் இன்னும் ஆத்திரமாக தாக்கும். ... சரி-தவறு.
2. கொசு இனத்தில் பெண் கொசுக்கள்தான் மனிதர்களைக் கடிக்கின்றன.... சரி-தவறு.
3. மரத்தின் வடக்குப் பக்கம்தான் காளான்கள் அதிகம் காணப்படுகின்றன.... சரி–தவறு.
4. உறைந்து போன மழைத் துளிகள்தான் பின்னர் பனியாகப் பெய்கின்றன.... சரி-தவறு.
5. பச்சோந்தி தான் இருக்கும் இடத்திற்கு ஏற்ப வர்ணத்தை மாற்றிக் கொள்கிறது.... சரி-தவறு.
6. காது கேட்காத மனிதனை விரியன்பாம்பைப்போல செவிடன் என்று சொல்லலாம்.... சரி-தவறு.
7. கோடைகாலம் குளிர் காலத்தைவிட வெதுவெதுப்பாய் இருக்கிறது. ஏனெனில் அந்த நேரங்களில் பூமி சூரியனுக்கு அருகில் சென்று விடுகிறது. ... சரி-தவறு.
8. விஷப்பாம்புகளை தங்கள் இனத்தைச் சேர்ந்த பாம்புகள் கடித்தால் விஷம் ஏறுவதில்லை.... ... சரி-தவறு.
9. மண்புழுவை இரண்டாக வெட்டினல், பிறகு இரண்டு துண்டுகளும் உயிர்பெற்று விடுகின்றன... ... சரி–தவறு.
10. ஷார்க் மீன்கள் பிராணிகளைக் கடிக்கும்போது வயிற்றை மேல்புறமாகத் திருப்பிக்கொள்கின்றன. ... சரி-தவறு.
11. யானைகள் பலநூறு வருஷங்கள் வாழ்கின்றன.... ... சரி-தவறு.
12. ஏதோ ஒரு பறவை பின்னேக்கிப் பறக்கிறது...... ... சரி-தவறு.
13. அணிலுக்கு ஞாபக சக்தி அதிகமிருப்பதால், தான் கடித்துப் போட்ட கொட்டைகள் எங்கெங்கு இருக்கின்றனவென்று சீக்கிரம் கண்டுபிடித்துவிடும.... ... சரி-தவறு.

இயல் இசை கூத்து......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

பகவானே செய்திருக்கிருர்—நாமும் செய்வோம் என்று தானே துணிவு ஏற்படும்!

அறிவுக்கு அணைபோட முயலும் நணபர்கள் என்ன சொல்லுகிருர்கள்? சமூகப் படங்களை நிறுத்திவிட்டு — மகாபாரதம், ராமாயணம் முதலியவைகளைப் படமாக்கலாம் என்கிருர்களா? எடுக்கலாமா? பாரதத்தில் உள்ளது உள்ளபடியே, கைச்சரக்கு எதுவும் சேர்க்காமல் படம் எடுத்துக் காட்டினல்—இந்த நாடே நாறிப் போய்விடுமே—செய்யலாமா, அந்த பகவத் கைங்கர்யத்தை? பழமை ரசிகர்கள்-பாசிபிடித்த உள்ளத்தினர்—தயார்தானு?

வியாசர் பாரதமும், வால்மீகி ராமாயணமும்-உள்ளது உள்ளபடி-வரிக்குவரி மாருமல்-படமாக்கப்படலாமா? பரத்துவாசர் ஆஸ்ரமத்திலே, பரதனுக்கு நடைபெற்ற விருந்தின் போது, காட்டப்படுகிற 'செக்ஸ் அப்பீல்' காட்சிகளை படமாக்க தமிழ்நாட்டு டைரக்டர்களால் இயலாது! 'ஹாலிவுட்'டும் போதாது! அவ்வளவு முதல்தரமான ஆபாசக் காட்சி-பழமை விரும்பிகள் பார்க்க வேண்டிய காட்சி! பகவானின் கதை என்பதாலும், உள்ளது உள்ளபடியே எடுத்திருப்பதாலும், தணிக்கைக் குழுவினரும வாய் திறக்கமாட்டார்கள்! திறந்த வாயையும் மூடமாட்டார்கள்; அத்துணை பக்திபாஷ்யம் பொழியும் காட்சியல்லவா அது!

[தொடரும்]

மூடு பனி......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

உன்மேல் நம்பிக்கை வைக்க. எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது மீண்டும் உம்மை சுற்றி சுற்றி வர! போதும்! போதும் உனது உறவு!

உமக்கு ஒன்றும் இல்லாத,
மேகலா

★

என்னுடையவளே!

வண்டுமனம் கொண்டவனுமல்ல-மந்தி குணம் படைத்தவனுமல்ல! கண்ணல் காண்பதும் பொய்; காதால் கேட்பதும்பொய்; தீர விசாரிப்பதுதான் மெய்-என்ற தத்துவத்தைபடித்தவளாகியநீயும் மறந்துவிட்டதுதான் ஆச்சரியம். சிறு சந்தேகம் சிறு பொறியாக இருந்தாலும் வாழ்வையே சுட்டு எரித்துவிடும்.

நீ கண்ணல் கண்டது உண்மை—ஆனல் நீ எண்ணியது உண்மையல்ல! இதோ, இத்துடன் இணைத்திருக்கும் கடிதம் உன்னை மறைத்திருக்கும் சந்தேக மூடு பனியை விலக்கட்டும்.

என்றும் உன்,
அத்தான்.

★

அன்புடையீர் !

வணக்கம். நீங்கள் தக்க சமயத்தில் உதவி பரிந்து, என் மகள் தாராவை—சூரிய வெப்பத்தால் மயங்கி விழுந்தவளை, முதலுதவி அளித்து என் இல்லத்தில் சேர்ப்பித்த தங்களுக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறேன். தாராவும் தங்களுக்கு தன் நன்றியைத் தெரிவிக்கிருள்.

தங்களன்புள்ள,
அமிர்தலிங்கம்,
மிராசுதார்.

★

என்னுடையவரே !

காலைக் கதிரவனின் தங்க ஒளி பட்டு விரைந்தோடும் இருளைப் போல-என் நெஞ்சத்தைக் கப்பியிருந்த சந்தேகம் பறந்துவிட்டது. அத்தான்! சந்தேகம்! அது இவ்வளவு கொடிய நஞ்சா? 'பூங்கொடி கொம்பில் படர்வதைப் போல ஒன்ருனேம் நாம்; நம்மை பிரிக்கும் சக்தி இந்த அகிலத்தில் இல்லை' என்று பீடு நடைபோட்டு உலவிய நம்மிடமே அந்த நச்சரவம் புகுந்துவிட்ட விந்தையை என்னென்பேன்! செல்வத்தின் சாயலிலேயே-மகிழ்ச்சியின் அரவணைப்பிலேயே வாழ்வைக் கடத்துவோரிடையே—துளி சந்தேகம் புகுந்தாலும், 'அக்குடும்பம் பாழ்' என்பார்களே — இப்போதுதான் உணர்ந்தேன் அதை! இத்தகையப் பயங்கர அனுபவத்திற்குப் பின்னுலா அந்த உண்மைமறைந்திருக்கிறது! நான் வெட்கப்படுகிறேன் அத்தான். ஆனல், இதோ...

மூடுபனி விலகிவிட்டது! ஆத்திரத்தில்அவசரத்திற்கு அடிமையாகிவிட்டேன்...அத்தான்...காத்திருக்கிறேன்......தம் தர! ஓடி வாருங்கள்......ஓடோடி வாருங்கள்!

என்றும் உங்கள்,
மேகலா.

★

துறவு......

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

"சன்ன, சன்ன!"

"ஏன் இளவரசே..."

"என்னிடம் யாராவது பேசிக்கொண்டிருந்த குரல் ஒலி வெளியே உனக்குக் கேட்டதா? அல்லது என்னுடைய அறையிலிருந்து யாராவது வெளியேறியதைப் பார்த்தாயா?"

"குரல் ஒலியும் கேட்கவில்லை; ஒருவரும் வெளியேறவும் இல்லை!"

"சரி; நான் மாலையில் கூறியபடி என் குதிரை கண்டகாவைத்தயார் செய்துவிட்டாயா? நான் புறப்பட வேண்டும். நாழியாகிவிட்டது."

"முடி துறந்து காடேக முடிவே செய்துவிட்டீர்களா?"

"ஆம்; இனி மக்கள் மனமே என் அரியணை. உலகமே என் சாம்ராஜ்யம். அன்பே என் ஆட்சி முறை. அறமே என் படை. அமைதியே என் இலட்சியம். சன்ன, குதிரையைத் தயார் செய். இது என் உத்திரவு!"

"குதிரை தயாராக இருக்கிறது"

"சரி, வா, புறப்படுவோம்..."

✶

ஆசையை அறுத்து, அன்று துவக்கிய பயணத்தின் மூலம், சனதனத்துக்கும், ஜாதித் திமிருக்கும் சித்தார்த்தன் விடுத்த அறைகூவல்தான், இன்று சாகாமல் தென்னுட்டில் சுயமரியாதை இயக்கமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது!

✶

வெளிவந்து விட்டது! முதல் வெளியீடு !!

திருமதி. சத்தியவாணிமுத்து
எழுதிய
எரிக்கப்பட்டாள்
எனும் வரலாற்று நூல்
விலை ரூ. 1
(மூவர்ண முகப்புடன்)
கழிவு 25 சத வீதம்
தபால் செலவு இனம்
மதி மன்றம்,
38, பிடாரியார் கோயில் தெரு, சென்னை-1.

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி...

திங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

கடிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். கனமாக-கத்தையாக இருந்தது ஒரு கடிதம். சிரிப்பு வந்தது எனக்கு. 'என்ன இது; கடிதம்தானா?' என்று முணு முணுத்த படியே பிரித்தேன்; படித்தேன்; அது கடிதமல்ல; கடித ருபக் கதை; ஒரு அபாக்கியத் தம்பியின் சோகக் கதையை சொல்லிய கடிதம். பத்து பக்கங்களில் பயனுள்ள கடிதம்; பலன் தரும் உங்களுக்கும். படியுங்கள்.

✶

சோகக் கதை!

மதுரை,
23—5—55

"அன்புள்ள அண்ணா,

நேற்று மாலை நான் ஒரு தம்பியை சந்தித்தேன். பாவம், அவன் ஒரு அனாதையாம். பரிதாபமாக இருந்தது; பலகாரம் வாங்கித் தந்தேன். புசித்தான். தன் கதையையும் என்னிடம் சொன்னான். 'அந்தக் கதையை ஏன் கேட்டுத் தொலைத்தோம்?' என்றாகிவிட்டது எனக்கு. அவ்வளவு சோகம்; அத்தனை வேதனை! இரவு முழுவதும் எனக்குத் தூக்கமேவரவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இதோ, அவன் சொல்லிய கதை:

சகோதரா! என் தந்தை ஒரு தொழிலாளி. இரவு பகலென்று பாராது—ஓய்வு ஒழிவின்றி உழைப்பார். தினம் தவறாமல் கோயிலுக்குச் செல்வார். உணவுக்கு வழியில்லை என்றால்கூட கவலைப்படமாட்டார். கோயில் அர்ச்சனைக்குப் பணம் இல்லை என்றால் சோர்ந்தே விடுவார். எங்கேயாவது கடன் வாங்கியாவது அந்தக் காரியத்தை முடித்து விடுவார்.

விபூதி பூசிக் கொண்டு—காவி உடை தரித்து யாராவது தெருவில் நடந்து சென்றால் போதும்; காலில் விழுந்து பணிவார்; கும்பிடுவார்; கொடுக்கும் விபூதியை வாங்கிக் கொள்வார்; பதிலுக்கு கையிலிருக்கும் பணத்தை எல்லாம் தந்து விடுவார். எப்படியிருக்கிறது? அவ்வளவு பக்திமான் அவர்!

ஒரு நாள் நானும் அப்பாவும் வீதி வழியே சென்று கொண்டிருந்தோம். தெரு முனையில் ஒரு கோயில் இருந்தது. அங்கிருந்த விபூதியை நெற்றியில் அப்பிக் கொண்டார். என் நெற்றியிலும் பூசினார்.

'எதற்கு?' என்று கேட்டேன். 'நீறில்லா நெற்றி பாழ்' என்றார். நான் பேசாமல் நடந்தேன்.

அப்போது ஒரு சிறுமி குப்பைத் தொட்டியில் சாம்பலைக் கொட்டினாள். காற்றடித்ததால் சாம்பல் தூசி பறந்து வந்து என் அப்பாவின் மீது கொஞ்சம் பட்டு விட்டது. ஆனால், அப்பாவோ பொல்லாத கோபம் கொண்டார். அச்சிறுமியை அடித்து விரட்டி விட்டார். தானாக எடுத்துப் பூசிக் கொண்ட சாம்பலுக்கும், தவறுதலாகப் பட்டுவிட்ட சாம்பலுக்கும் என்ன வித்தியாசத்தைக் கண்டாரோ, அவர்! நான் வெட்கினேன்.

நான் ஒரு முறை காய்ச்சலாகப் படுத்து விட்டேன். போகாத கோயிலுக்கெல்லாம் போனார்; வேண்டாத கடவுளையெல்லாம் வேண்டினார். அதோடு நிற்கவில்லை; டாக்டரிடமும் காட்டினார். அவர் கொடுத்த மருந்தினால் நான் குணமானேன். ஆனால் என் தந்தை என்ன சொன்னார் தெரியுமா? திருப்பதியானுக்கு வேண்டிக் கொண்டதால்தான் என் காய்ச்சல் குணமானதாம். ஆகையால் திருப்பதிக்குப் போக வேண்டும் என்றார். அதற்காகப் பணமும் சேர்த்து வைத்து வந்தார்.

"அந்தக் காலத்தில் இப்படி யாப்பா கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தார்கள்? திருக்குறளில் 'கோயில்' என்று ஒரு வார்த்தைகூட இல்லையென்று எங்கள் தமிழ் வாத்தியார் சொல்லியிருக்கிறாரே, அப்பா" என்று கேட்டேன் நான். 'அவனன்றி அணுவும் அசையாதடா முட்டாள்! உனக்கென்னடா தெரியும்?' என்று கடிந்து கொண்டார்.

திருப்பதிக்குப் போக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் என் அப்பாவின் இடது கால் இயந்திரத்தில் அடிபட்டு விட்டது. நான் துடித்துப் போய் விட்டேன். எலும்பு முறிவு என்று சொன்னார் டாக்டர். கொஞ்சம் கொஞ்சமாக குணமாகி வந்தது.

என்றாலும், "குறிப்பிட்ட தினத்தில் கட்டாயம் திருப்பதி போக வேண்டும்: இல்லாவிட்டால் கடவுள் கடுந் தண்டனை கொடுத்து விடுவார்" என்று ஒற்றைக் காலில் நின்றார். டாக்டர் 'போகக்கூடாது' என்று கூறினார். ஆனால் அப்பாவோ "என்னப்பன் ஏழுமலையான் கிருபையாலே எனக்கு ஒரு தீங்கும் வராது, டாக்டர்!" என்று கூறி விட்டுப் புறப்பட்டார்.

நானும் என் தந்தையும் திருப்பதி சென்றோம். கால் வலியையும் பொருட்படுத்தாது மலை மீது ஏறினார். நடந்தே சென்றோம். பாதி தூரம்தான் சென்றிருப்போம். அதற்குள் மயங்கி விழுந்து விட்டார். பல படிகளில் உருண்டு உருண்டு கீழே விழுந்தார். பலமாக அடி பட்டுவிட்டது; இரத்தம் பீறிட்டது. கதறி விட்டேன்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கேள், தம்பி!

செல்வம்

கொஞ்சம் திரும்பிப் பார்; சொல்வதைக் கேள்! என்ன சொல்லப் போகிறேன் என்று துடிக்கிறாயா? உன்மேல் அன்பால் சொல்லுகிறேன்—அவசியமான ஒன்றுதான். உன்னைச் சுற்றி சுற்றிவந்து கொண்டிருக்கிறான் ஒருவன்; விடாமல் துரத்திக் கொண்டேயிருக்கிறான்; 'யார் நீ?' என்று அவனைக் கேட்டால், 'தெரியவில்லையா? நண்பன்தான்' என்று சொல்வான்; பாசமுடன் பேசுவான்; நேசமுடன் சிரிப்பான்; ஆனால் மோசக்காரன் தம்பீ, அவன்!

ஏன் இப்படி திகைக்கிறாய்? 'நட்பு' என்று நெருங்குபவனை 'நாசக்காரன்' என்கிறேனே, அதனாலா? முழுதும் கேள்! அவன் விபரீத புத்திக்காரன்தான், உனக்குக் கண்டிப்பாக வேண்டாதவனேதான். எப்படி என்கிறாயா? படிக்கலாம் என்று உட்காருவாய்; பக்கத்தில் வந்து விடுவான்; சும்மாயிருப்பான் என்கிறாயா? மாட்டவே மாட்டான். பேசிக் கொண்டிருந்தாலாவது பரவாயில்லையே. 'படிக்காதே நண்பா; படுத்து விடு உடனே!' என்று அன்புக் கட்டளை போடுவான்; படிப்பையும் கெடுத்து விடுவான்.

விளையாடப் போகும் நேரமும் உன்னைவிட மாட்டான். சிரித்து மகிழ்ந்திருக்க வேண்டிய அந்த சமயத்திலும், உன்னை 'ஓய்வு' என்ற கயிற்றால் கட்டி, உட்கார வைத்து விடுவான். நீ மீறிப் பேசமுடியாது; விடமாட்டான் அவன்.

இன்னும் அப்பா தரும் வேலையை—அம்மா சொல்லும் கட்டளையை—செய்யத் துடிப்பாய்; ஆனால், உடனே துவண்டு போவாய்; காரணம்...? வந்து விடுவான் அந்த சமயம் பார்த்திருக்கும் சிநேகிதன்!

அவசரப்படாதே, சொல்கிறேன் அவன் யாரென்று! நெருங்கி வந்தால் விரட்டிவிடு; என்ன, செய்வாயா? சொல்கிறேன் கேள்; அவன் தான் ஊக்கம் கெடுக்கும் உன்மத்தன்—ஆர்வம் குலைக்கும் ஆபத்தானவன்—சூதுக்கார **சோம்பல்** என்பான்!

பனிரெண்டு வயதிலே பாட்டெழுதிய பாப்பா!

கலங்கிப் போன கண்கள்—கவலை தோய்ந்த முகம்—கையிலே ஒரு புத்தகம்-இந்தக் கோலத்தோடு வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தது ஒரு பாப்பா. அதற்கென்ன கவலை? துன்பம் என்பதே என்னவென்று அறிந்து கொள்ளக் கூடாத வயதல்லவா, அது? ஆனாலும் அமைதியையிழந்ததாகவே காணப்படுகிறது அந்தப் பாப்பா. காரணம் தான் என்ன?

அதோ, அதனுடைய அண்ணன்வருகிறார். தங்கையின் கவலைக்குக் காரணத்தைக் கேட்காமலா விடப் போகிறார்? பார்ப்போமே!

அவர் நெருங்கி விட்டார். அவர் கையிலே ஒரு வயலின் பெட்டி இருக்கிறது. ஆமாம்; அவர் ஒரு சங்கீத வித்வான். எங்கோ நிகழ்ச்சிக்குச் சென்று விட்டு வருகிறார்

தங்கையிடம் வந்தார் அண்ணன். அதன் முகத்தை உற்றுப் பார்த்தார். பயந்தே விட்டார்; பதறிப் போனார். "என்னம்மா; ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?" என்று கேட்டார், படபடப்புடன்!

"ஒன்றுமில்லை அண்ணா! இந்தப் புத்தகத்தைப் படித்தேன். துன்பத்தைப் பற்றிய புத்தகம் இது. இதைப் படித்ததும் எனக்கு ஒரு ஆவல் தோன்றி விட்டது அண்ணா! துன்பத்தைப் பற்றி ஒரு அழகான பாட்டு எழுதினால் என்ன? அந்த ஆவல் இப்பொழுது ஒரேகவலையாகவும் மாறி விட்டது. எப்படி எழுதுவது? காலை முதல் யோசிக்கிறேன்; யோசிக்கிறேன்... ஒன்றுமே புரியவில்லை!"—இப்படிச் சொல்லியது தங்கை. அதற்கு அழுகையே வந்து விட்டது!

அண்ணன் சிரித்தார். "ஐயோ பைத்தியமே! முடியாததை நினைத்து ஏன் வருந்துகிறாய்? வா... வா... பாட்டு கற்கும் நேரமாகி விட்டதல்லவா?" என்று சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார். ஆனால் தங்கையோ வழக்கம் போல் பாட்டு பாட செல்லவில்லை. யோசித்துக் கொண்டேயிருந்தது. என்ன பாடு பட்டாவது பாட்டு எழுதி விடத்தான் வேண்டும்— இது அதன் அசைக்க முடியாத முடிவு.

முடியாததற்கு முயலும் அதன் நிலை கண்டு பரிதாபம் தோன்றுகிறதல்லவா? அப்படி பரிகசித்தீர்களேயானால் அது பெரும் தவறு. ஏன் தெரியுமா? அந்தப் பாப்பா முயற்சியில் தோற்கவேயில்லை; இரவோடு இரவாக ஒரு குட்டிப் பாடல் எழுதியே விட்டது; தன் அண்ணனிடமும் காட்டி 'சபாஷ்' பட்டமும் பெற்று விட்டது! அந்தப் 'பிடிவாதத் தங்கை' யார் என்று கேட்கிறீர்களா? கேளுங்கள்; அதுதான் ஆங்கில நாட்டு பெண் கவிஞர்களில் ஒருவரான கிரிஸ்தியானா ரோசத்தி!



கடல் கடந்தோர் கடிதம்

ஆசிரியருக்கு,

மலாயா நாட்டில் வாழ்கின்ற இந்தியர்களில், பெரும் பகுதியினர் தமிழர்கள். அவர்கள் மற்ற தொழில் புரியும் மக்களைவிட மிகவும் கீழ்ப்பட்டவர்களாக-கேவலமான நிலையில் வாழ்கிருர்கள்.

இந்த நாட்டிலே, மற்ற சமூக மக்கள் வெகுவாக அரசியல்-சமூக-பொருளாதார துறைகளில் முன்னேறிக் கொண்டு போகின்ற போது, இந்திய சமூகத்தவர் மட்டும் பின் தங்கிக் கிடந்தால் அரசியலிலே சரியான அந்தஸ்தைப் பெற முடியுமா? இந்தியர்களில் 100-க்கு 80பேராக உள்ள தமிழர்கள் ரப்பர் தோட்டங்களில் ஒன்றும் தெரியாதவர்களாக-அரசியல் அறிவு மட்டுமல்ல-மற்ற தங்களது சொந்த வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற மிகச் சாதாரண அறிவு கூட இல்லாமல் வாழ்ந்து கொண்டுவரும்போது, எப்படி இந்திய சமூகம் முன்னேறிவிட்டதாக-முன்னேறிக் கொண்டிருப்பதாக எண்ணமுடியும்? சொல்ல முடியும்?

மலாயா கூட்டாட்சியின் கடுமையான விதிகளின் மூலம், இந்த நாட்டு பிரஜா உரிமை பெற முடியாமல் பெரும்பான்மையான தமிழர்களை பிரஜா உரிமைச் சட்டம் தடுத்து விட்டது. ஆனல் சிங்கப்பூர் காலனி அரசாங்கம் மிகச் சுலபமாக இந்த நாட்டு பிரஜா உரிமை எடுக்க வழிகள்-வசதிகள் செய்திருந்தும் இன்னும் பெரும்பான்மையினர் பிரஜா உரிமை எடுக்காமல் இருப்பது, வருங்காலத்தில் இங்கு தமிழர்களின் வாழ்வு எவ்வளவு துக்ககரமான சம்பவங்களைத் தாங்க வேண்டி நேரிடும் என்பதற்கு எடுத்துக் காட்டாகவே இருக்கின்றது.

ஒரே பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் நேரடி ஆளுகையின் கீழ் உள்ள மலாயாவில், மலாயா கூட்டாட்சியில் பிரஜா உரிமைக்கு ஒரு சட்டமும்—காலனியில் ஒரு விதமான சட்டமும் ஏற்படக் காரணம் என்ன?

இன்று, மலாயாவில் ஏற்படுத்தப் பட்டுள்ள பிரஜா உரிமைச் சட்டத்தால் 4 லட்சத்திற்கு அதிகமான தமிழர்கள்—தோட்டத்தில் உள்ளவர்கள்—இந்த நாட்டில் உரிமையற்றவர்கள்—தகுதியற்றவர்கள் என்று தீர்மானிக்கப் பட்டு-முடிவு செய்யப் பட்டு விட்டதே: அவர்களுடைய வருங்கால வாழ்க்கைக்காக தொழிற்சங்கத்தலைவர்களோ—தமிழர்களுக்குத் தாங்கள்தான் தலைவர்கள் என்று தாங்களே கூறித் திரிபவர்களோ என்ன வழி செய்திருக்கிருர்கள்? என்ன செய்யப் போகிருர்கள்? இனி என்ன செய்ய முடியும்?

கடலலைகளை தூதனுப்பும் கடல் கடந்தோர், தாயகத்தை நோக்கி இக் கேள்விக் குறிகளை எழுப்புகிருர்கள்!

சிங்கப்பூர்,
15—5—55 **'கனகன்'**

பிறைவானம்...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

நான். கண்ணுல் காணச் சகிக்கவில்லை அந்தக் காட்சியை! அவர் முகம் கோரமாக்கப் பட்டது. அங்கேயே—அந்த மலைப் பாறைகளுக்கிடையே—அவர் என்னை விட்டுப் பிரிந்தார். ஆமாம்; சகோதரா! தாயற்ற என்னை அனுதையாக்கி விட்டான் திருப்பதியான்!

எந்த ஆண்டவனும் அபயமளிக்கவில்லை; என் அழுகுரலைக் கேட்டு "வருந்தாதே தம்பி" என்று ஆறுதல் தரவில்லை; நான் தேறுதல் பெறவில்லை! தந்தையைக் காணுது அழுத திருஞானசம்பந்தருக்குப் பால் கொடுத்த பார்வதி, தந்தையை இழந்து தடுமாறிய எனக்கு உதவாதிருப்பது ஏன்?"

அந்தப் பிஞ்சு உள்ளத்திலிருந்து குமுறியெழுந்த வரலாற்றைக் கேட்ட என் கண்கள் குளமாயின!

இப்படிக்கு,
இரா. தம்பி.

★

அந்த அனுதைத் தம்பியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியுமா உங்களால்? விடை கிடைக்காத வினுவல்ல; சிந்தித்துப் பாருங்கள்; பதில் கிடைக்கும்; ஆண்டவனின் நிலை புரியும்!

★

அறிவுச் சோதனை

சரியான பதில்

1. சரி : அநேகமாக எல்லா துஷ்ட மிருகங்களும், நாம் நடுங்கினுல் அதிகமாக மிரட்சி கொள்கின்றன.
2. சரி : பெண் கொசுக்கள்தான் இரத்தம் உறிஞ்சுகின்றன. ஆண் கொசுக்கள் சில தாவர ரசங்களைத்தான் உட்கொள்ளும்.
3. தவறு : காளான் எங்கும் உற்பத்தியாகும். ஈர நிலையையும், காற்றடிக்கும் திசையையும் பொருத்திருக்கிறது.
4. தவறு : பனி உற்பத்தி செய்யும் மேகங்களிலிருந்தே பனி உற்பத்தியாகும். உறைந்து போன மழைத் துளிகளுக்கு 'ஆலங்கட்டி மழை' என்று பெயர்!
5. தவறு : பச்சோந்தி உட்கார்ந்திருக்கும் இடத்தைத் தவிர வெப்பதட்ப நிலை, அதன் உடல்நிலை, இவைகளைப் பொறுத்துத்தான் அதன் நிறம் மாறும்.
6. சரி : விரியன் பாம்புக்கும், மற்ற பாம்புகளைப் போலவே காது செவிடு.
7. தவறு : ஜனவரி 2-ந்தேதி யன்று நாம் சூரியனுக்கு வெகு அருகாமையில் இருக்கிருேம். குளிர்காலம் மிகக் குறைவாகவும், சூரியனின் கதிர்கள் ஒருவிதக் கோணத்திலும் வீசப்படுவதால் நாம் அந்த செளகரியத்தை அதிகம் அடைய முடிவதில்லை.
8. சரி : ஒரு பாம்பு இன்னெரு பாம்பைக் கடித்தால் விஷம் ஏறுவதில்லை.
9. தவறு : இருமுனைகளுக்கும் உயிர் வராது. தலைப் பக்கம் மட்டும் இன்னெரு புழுவாக உயிர் வாழும். வால் பக்கம் செத்துவிடும்.
10. சரி : ஷார்க் மீன்கள் எதிரியைத் தாக்குவதற்கு சில சமயங்கள் சாய்ந்து கொண்டாலும், எப்போதும் இருக்கும் நிலையில்தான் அவைகள் பிராணிகளைக் கடிக்கின்றன.
11. தவறு : யானைகள் அநேகமாக 50-வருஷங்களுக்கு மேல் உயிர் வாழ்வதில்லை.
12. சரி : தேன் உறிஞ்சும் ஒருவிதப் பறவைகள், சில ஆழமான பூக்களிலிருந்து தேன் உறிஞ்சிக்கொண்ட பின்னர் பின்னேக்கி பறந்து வெளியே வருகின்றன.
13. தவறு : அணிலுக்கு மறதி அதிகம். எங்கே கொட்டைகளை வைத்திருக்கிருேம் என்பதை மறந்துவிடும். காடுகள் வளர்வதற்கு அணிலின் மறதியும் ஒருகாரணம்.

கொள்கை வளருது கோபுரம் போலே!

சென்னை

(மறுமலர்ச்சி நூல் நிலைய சார்பில்)
சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்காவில்)
27—5—55
மாலை 6 மணி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
ஆர். எஸ். பாண்டியன்

பாபநாசம்

28—5—55
மாலை 6 மணி
பேசுவோர் :
க. அன்பழகன்
ஏ. வி. பதி

வேட்டவலம்

(மந்தைவெளி மைதானத்தில்)
28—5—55
மாலை 6 மணி
பேசுவோர் :
ப. உ. சண்முகம்
ப. சேயராமன்

வேலூர்

(திராவிட நகரில்)
29—5—55
மாலை 6 மணி
பேசுவோர் :
முல்லை-சத்தி
போளூர். சுப்ரமணியம்
கருத்தோவியன்
அ. பாலகிருஷ்ணன்

பரங்கிப்பேட்டை

(சஞ்சீவிராயர் கோவில் எதிரில்)
31—5—55
மாலை 6 மணி
பேசுபவர் :
க. அன்பழகன்

பந்தநல்லூர்

31—5—55
பேசுவோர் :
க. அறிவழகன்
வரதராசன்

மதுரை நகர்

தி. மு. க. ஆண்டு விழா
29—5—55
பேசுபவர்: க. அறிவழகன்

திருத்தம்

இவ்விதழ் முதல் பக்கத்தில், மூன்ருவது பத்தியின் அடியில் *பிராமண ரிஷிகள் ஆட்டு மாமிசமாக மாறி* என்றிருப்பதை, *பிராமண ரிஷிகள் ஆட்டு மாமிசம் சாப்பிடுவது வழக்கமாக இருந்ததால்தானே, வாதாபி என்பவன் ஆட்டு மாமிசமாக மாறி* என்று திருத்திப் படிக்க வேண்டுகிருேம்.

அன்பழைப்பு

தோழரீர்,

2—6—55 வியாழன் காலை 8-30-மணி அளவில், சேலம் டவுன், நெ. 1 புதுத்தெரு 30-ம் எண்ணுள்ள இல்லத்தில், சேலம் தோழர் ஏ. சித்தையன் அவர்கள் தலைமையில், தோழியர் தனலட்சுமி அம்மையை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் தமிழ்த் திருமண விழாவுக்கு வந்திருந்து சிறப்பிக்க உனைவரையும் அன்போடு அழைச்கிறேன். தயவு செய்து நண்பர்கள் இதனையே அழைப்பு மடலாகக் கருத வேண்டுகிறேன்.

சென்னை,
27—2—55.

சி. வி. இராசன்,
ஓவியர், 'முரசொலி'

“சினிமா ஒழிக!”

‘சினிமா ஒழிக!’—இப்படி ஒரு கூச்சல் நாட்டின் சில பகுதிகளிலேயிருந்து கிளம்புகிறது. சந்து பொந்துகளிலேயிருந்து புறப்படும் இந்தப் புலம்பல் ஒலிக்கு உரியவர்கள் பெருந்தலைகள் எனப் படுபவர்களாயுமிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நமக்கு சிரிப்புத்தான் வருகிறது. வயதேறி, நடக்க சக்தியற்று, திண்ணையிலே மனிதப் பழமாக அமர்ந்திருக்கிறதே அந்தக் கிழம்—அதற்கு சங்கடமாகத்தானிருக்கும், தெருவிலே சினிமா விளம்பர வண்டி போவதைப் பார்க்கும்போது! ஆகவே, அந்தக் கிழம் “சினிமா ஒழிக” என்று சொல்வதிலே ஆபத்தான உள்நோக்கம் எதுவுமில்லை.

இன்னொரு சாரார் — தங்களுக்கு சினிமாவில் நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே, என்ற ஏக்கத்தால் ‘ஒழிக’ முழக்கம் எழுப்புகிறவர்கள். இவர்களும் ஆபத்தானவர்கள் அல்ல; மாறாக — அனுதாபத்திற்குரியவர்கள்!

மற்றொரு ‘குரூப்’ இருக்கிறது; தன் வீட்டுப் பிள்ளைகளும் திரை வானில் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன என்பதை மறந்துவிட்டு — ‘இந்தக் கண்ணீர்த் துளிகள் எல்லாம் சினிமாக் கட்சிக்காரர்கள்; ஆகவே சினிமா ஒழிய வேண்டும்’ என்று சிந்து பாடிக்கொண்டு! இதுவும் ஆபத்தான சமாச்சாரமல்ல; வளர்ந்து வரும் சினிமாக் கலைக்கு மொத்தமான எதிர்ப்புமல்ல!

சினிமா மூலம், புதுமைக் கருத்துக்கள் பரவுகின்றன; புராதனக் கருத்துக்கள் அழிக்கப்படுகின்றன —பகுத்தறிவின் வளர்ச்சிக்கும், அந்த வளர்ச்சிக்காக உழைப்பவர்களின் வெற்றிக்கும், சினிமாவும் ஓரளவு காரணமாக ஆகிவருகிறது- எனக் கண்ட ஒரு கூட்டம் ‘சினிமா ஒழிக’ என்று கூவும் போதுதான் சிறிது அதிர்ச்சி ஏற்படுகிறது! ஏனெனில், அடிமுதல் நுனி வரையில் ‘அவாள்’ நிறைந்திருக்கும் அரசாங்கத்தில், அறிவுப் பிரச்சாரத்திற்கு அணைபோடும் கைங்கர்யத்தை சுலபமாக ஆரம்பித்துவிட முடியும் அவர்களால்! அதற்கு அஸ்திவாரமாகத்தான் பழமைக் குட்டையிலே ஊறியிருக்கும் சிலர், சில நாட்களாக சினிமா எதிர்ப்புப் பிரச்சாரத்தை மிக தீவிரமாக செய்து வருகிறார்கள்.

எவனோ, எங்கேயோ திருடுகிறான்—கோர்ட்டிலே கேட்கும் போது, பத்திரிகையிலே பரபரப்பாக செய்தி வரட்டுமே என்பதற்காக—“அந்தப் படத்தைப் பார்த்தேன்; அதனால் திருட எண்ணினேன்” என்று கதை அளக்கிறான். இதைக் கண்ட அறிவின் விரோதிகள், “ஆகா! பார்த்தேளா! அந்தப் படத்திலே கொள்ளையடிப்பதைக் கலை யென்கிறான் ஒருத்தன்; அதைப்பார்த்துண்டு திருடாளும் பெருகிட்டா!” என்று திண்ணை மாநாடு நடத்தி, அந்தத் தீர்மானத்தை ‘அவாள்’ சர்க்காருக்கும் அனுப்பி வைக்கிறார்கள். சர்க்கார், தணிக்கை போர்டை பார்க்கிறது—தணிக்கைபோர்டு கத்தரிக்கோலைப் பார்க்கிறது—கத்தரிக்கோல் படத்திலுள்ள நல்ல கட்டங்களைப்பார்க்கிறது —நாம் யாரைப் பார்ப்பது?—அடிமையாயிருக்கும்வரையிலே நம்முடைய கட்டுண்ட கரங்களைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்! படத்திலே கொள்ளைக்காரன் வருவது உண்மை—அட்டகாசம் புரிவதும் உண்மை—ஆனால், “படம் தந்த பாடம்தான் நான் செய்த குற்றத்திற்குக் காரணம்” என்பவன், படத்தை முழுதும் பார்க்காதவனாயிருக்க வேண்டும்; அல்லது டிக்கெட் வாங்காமல் உள்ளே நுழைந்து, தியேட்டர்காரர்களால் “இண்டர்வெல்”லுக்கு முன்பு வெளியேற்றப்பட்டவனாயிருக்க வேண்டும். திருடுகிற கொள்ளைக்காரனின் கடைசி முடிவு என்ன? அவனுக்கு நீதி வழங்கும் நல்ல தீர்ப்பு என்ன? பாதகன் அடையும் பயங்கரமான முடிவு எது? அநியாயம் செய்து வாழ்ந்தவன் அழிகிறானா இல்லையா? தான் செய்த தீமைகளே, தன்னை அழிக்கின்றனவா இல்லையா? படத்திலே கொடியவனுக்கு நிச்சயமாகத் தண்டனை தரப்படும் காட்சி காட்டப்படுகிறது! திருடன் அழிகிறான்; தீயவன் சாகிறான்; அல்லது திருந்துகிறான்.

படம் பார்ப்பவன், தீயவனுக்கேற்படும் முடிவை உற்று நோக்கித் திருந்த வேண்டுமென்பதே, கதாசிரியரின் ஆசையாயிருக்கலாம். சினிமா எதிர்ப்பாளர்கள்—மன்னிக்கவும் இல்லை; அறிவப்படை எதிர்ப்பாளர்கள் - வேண்டுமென்றே திரித்துக்கூறி, தீமைகள் சமூகப் படங்களாலேயே பரவுகின்றன என்ற கருத்தை நிலைநாட்டப் பார்க்கிறார்கள். சமூகப் படத்தில் பெண்ணைத் திருடிக்கொண்டு போவது போல காட்சி வந்தால் அதைப் பார்த்து மற்றவர்கள் அதே போல் ஆரம்பிப்பார்கள்—என்று கூறுகிறார்கள்.

சமூகப்படத்திலாவது பெண் திருடும் ‘வில்லன்’ இறுதியில் தண்டிக்கப்படுகிறான்—பழமைவாதிகள் விரும்பும் புராணப் படத்திலே, ருக்மணியைத் திருடிச் செல்லும் கிருஷ்ணன் கடவுளாக அல்லவா ஆக்கப் பட்டுவிடுகிறான்! இரண்டில் எந்தப் படத்தைப் பார்ப்பதால் மனிதன் கெடுவான்?—சமூகப் படத்தையா? புராணப் படத்தையா?

‘ரத்தக்கண்ணீர்’ படம்—சமூகப் படம்—அதனால் விபச்சாரம் பெருக வழியேற்படும் என்று, ஒரு சில ‘வாலறுந்ததுகள்’ கத்தின. ரத்தக்கண்ணீரில், பெண்களின் மடியிலே புரளும் மோகனுக்கும், கிருஷ்ணலீலா கிருஷ்ணனுக்கும் என்ன வித்தியாசம்?—மோகனாவது, ரோகம் பிடித்து அலைகிறான்; தீயவனின் முடிவுக்கு உதாரணமாகிறான். படம் பார்க்கும் தோழன்—மோகனைப் போல் திருவிளையாடல்களில் ஈடுபடக்கூடாது என்றாவது பயப்படுவான்! கிருஷ்ணலீலா பார்ப்பவனுக்கு அந்தப் பயமும் ஏற்படாதே;

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

சென்னை தியாகராயர் கல்லூரி கலாமண்டபத்தில்

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர்

நடிக்கும்

மணி மகுடம்

12–6–55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

ஒரே நாள் மட்டும்!

ரங்கோன் ராதா

★ அறிஞர் அண்ணாவின் பொன்னோவியமாம் ரங்கோன் ராதா படப்பிடிப்பு ஜூன் மாதம் ஆரம்பமாக இருக்கிறது. மேகலா பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தின் முழு உரிமைகளையும் நேஷனல் பிக்சர்ஸார் பெற்றிருக்கிறார்கள். ஏ காசிலிங்கம் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தில் தர்மலிங்க முதலியாராக சிவாஜி கணேசனும், ரங்கமாக பானுமதியும், முதலியாரின் மகன் நாகசுந்தரமாக எஸ். எஸ். ராஜேந்திரனும், நடிப்பதற்கு ஒப்பந்தமாகியிருக்கிறார்கள் கலைவாணர்என்.எஸ். கிருஷ்ணன், மதுரம் இருவரின் நகைச்சுவை விருந்துக்கும் நிறைய இடமுண்டு.

நீதிபதி

★ நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியின் சொந்தப் படமான நீதிபதி யில், கே. ஆர். ஆர்., ஜெமினி கணேசன், சகஸ்ரநாமம், டி. எஸ். பாலையா, எம் என். ராஜம், ராஜ சுலோசனா, மாலதி முதலியோர் நடிக்கிறார்கள். கதை வசனம் சோலைமலை. டைரக்ஷன் பொறுப்பை ஏ. எஸ். ஏ. சாமி ஏற்றுள்ளார்.

மெர்குரி பிலிம்ஸ்

★ ஆசைத்தம்பி எழுதி, காசிலிங்கம் டைரக்ட் செய்யும் மெர்குரி பிலிம்சாரின் பெயர் வைக்கப்படாத படத்தின் படப்பிடிப்புகள் ஆரம்பமாகிவிட்டன. இதில் சிவாஜி கணேசன், ஜி வரலட்சுமி, ராஜசுலோசனா, ஸ்ரீராம் ஆகியோர் நடிக்கிறார்கள்

தெனலி ராமன்

★ கவிஞர் கண்ணதாசன் எழுதும் ‘தெனாலிராமன்’ படம் வெகுவேகமாக தயாராகிறதாம். இதில் சிவாஜி கணேசன் முக்கிய பாத்திரமேற்று நடிக்கிறார் மற்றும் ஜமுனா முதலியோர் நடிக்கிறார்கள்.

அலிபாபா

★ மாடர்ன் தியேட்டர்ஸ் அலிபாபா படப்பிடிப்பை அதன் டைரக்டர் டி. ஆர். சுந்தரம் மிகத் துரிதமாக கவனித்து வருகிறார். எம். ஜி ஆர். பானுமதி நடிக்கும் இந்தப் படத்திற்கான வசனங்களை மாறன் பி. ஏ. ஹானர்ஸ், ஏ. எல். நாராயணன் இருவரும் எழுதுகிறார்கள்.

ராஜா ராணி

★ நேஷனல் புரொடக்ஷன்ஸ் ‘ராஜாராணி’ நியூடோன் ஸ்டுடியோவில் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது சிவாஜி கணேசன் ராஜேந்திரன், பத்மினி இதன் முக்கிய நடிகர்கள்.

★

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் :
(●) சன்ராஜ்; சின்னாளப்பட்டி.

ஆர். வி. வாசன்; நாகை.

(?) இந்தியாவில் அதிகமாக உற்பத்தியாகும் பொருள் எது?

குழந்தை!

(?) தென் இந்திய காங்கிரஸ்காரர்களும், மந்திரிகளும் கதர் குல்லாய் அணியாதது ஏன்?

அவர்களில் பெரும்பாலோருக்கு இன்னும் வழுக்கை தோன்றவில்லை.

வேலுசாமி; மேட்டுப்பாளையம்.

(?) குள்ளநரி இப்பொழுது நாட்டில் வாழ்வதில்லையாமே?

இல்லை; மும்முனைப் போராட்டத்திற்குப் பிறகு அதைத்தான் திரும்பவும் நாட்டிலிருந்து காட்டிற்கு விரட்டியடித்து விட்டோமே!

உரு. மணிவண்ணன்; திருவாரூர்.

(?) நினைத்த உடனே மகிழ்தலும், கண்ட உடனே களிப்பைத் தருவதுமான பொருள் யாது?

குறள் உணர்ந்தவன் பெண் என்று பதில் சொல்வான்! தேசிய வீரர்களின் மனம் உணர்ந்த நான் பதவி நாற்காலி என்பேன்.

கரிகாலன்; திண்டுக்கல்.

(?) ஆவடி சோஷலிசம் என்றால் என்ன?

காந்தியாரின் சர்வோதயக் கோள்கையை சாம்பலாக்கி, அதை அஸ்திவாரமாகக் கொண்டு, வடநாட்டு வட்டி வேந்தர்களை தூணாக வைத்து, வருகிற தேர்தல் தெருக் கூத்துக்காக நேரு எழுப்பிய காகிதக் கோட்டை!

அ. சண்முகம்; பொள்ளாச்சி.

(?) நான் சமீபத்தில் 'டாப்ஸ்லிப்' புக்கு சென்றிருந்தேன். அங்கு பிடிக்கப் படும் யானைகளுக்கு பெயர் வைக்கும் உரிமைகூட மத்திய அரசாங்கத்துக்குரியதாம்! இது பற்றி உங்கள் கருத்தென்ன?

தென்னகத்து யானைக்கு விடுதலை 'மதம்' தலைக்கேறும்வரையில் அப்படித்தான் நடக்கும்!

சுப்பிரமணியன்;
கோபாலசமுத்திரம்.

(?) கடையேழு வள்ளல்களில் ஒருவர் தற்போது இருந்திருந்தால்...?

இந்த காங்கிரஸ்காரர் ஆட்சியில் அவரும் ஓட்டாண்டி ஆகி இருப்பார்!

ராசு; கோவை.

(?) உலகிலேயே முதன் முதலில் தொடர்கதையை ஆரம்பித்தவர் யார்?

ஆதாமும், ஈவாவும் என்கிறது பைபிள்!

அம்பிகைநாதன்; சென்னை-2.

(?) மனிதனுக்கு கற்பனை தோன்ற வேண்டுமானால் அமைதி அவசியமா? அல்லது தனிமை அவசியமா?

இரண்டுமே இல்லை. மூளை!

சண்முகராஜ்; சென்னை-8

(?) பிரபல பணக்காரர்களான டாங்கே, நாகிரெட்டி, மோகன் குமாரமங்கலம்போன்றவர்களை வைத்துக்கொண்டு கம்யூனிஸ்ட் தங்களை ஏழைக் கட்சி என்கிறார்களே, ஏன்?

உண்மைதான்; வெளி வேஷம் போடுவதிலே நம்முடைய கம்யூனிஸ்ட்கள் ஹாலிவுட் 'மேக் அப்'காரர்களையும் மிஞ்சி விடுகிறார்கள்!

எஸ். எம். ராசன்; புள்ளம்பாடி.

(?) மனிதனுக்கு உரிமைகள் இயற்கையினால் உண்டாகின்றனவா? அன்றி சட்டத்தினாலா?

உரிமைகள் மனிதனின் உடன் பிறப்பு. சட்டம் அதன் பாதுகாவலன். சட்டம் அதை வெட்ட முனையும்போதுதான் பிரெஞ்சுப் புரட்சிகள் நடைபெறுகின்றன; பாஸ்டிலிகள் உடைபடுகின்றன!

(●) சன்ராஜ்; சின்னாளப்பட்டி.

(?) திறமையுள்ளவர்கள் ஆட்சியைக் கேட்டால் கொடுக்கத் தயார் என்கிறாரே காமராஜர்; இதைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?

ஆட்சி என்ன காமராசரின் சுயார்ஜித சொத்தா, அவர் மற்றவர்களுக்கு தானம் செய்வதற்கு? பொதுமக்கள் இருக்கிறார்கள், திறமையை நிர்ணயிக்க!

(?) காம்ரேட்கள் 'மானம் பெரிதா, சோறு பெரிதா' என்று தர்க்கம் செய்கிறார்களே, சோறு கிடைத்தால் அடிமையாய் இருக்க அவர்கள் சம்மதிப்பார்களா?

இப்போது மட்டு என்ன, வாழ்கிறதாம்! இன்றும் — என்றும் அவர்கள் வடநாட்டு தலைமைக்கு அடிமைகள்தான்.

கூடலரசன்; சிச்சிப்பாளையம்.

(?) அரசன் ஆண்டியானதற்கு பருக்கை தவிர வேறு உதாரணம் காட்ட முடியுமா?

ஆச்சாரியாரை ஏனோ மறந்தீர்!

(?) பிரம்மச்சாரியான வி. கே. கிருஷ்ணமேனன் எப்பொழுது திருமணம் செய்து கொள்ளப் போகிறார்?

விரைவில்! நேருவின் மந்திரிசபையில் 'வெளிநாட்டு இலாகா' எனும் மங்கை அவருக்காக காத்துக்கொண்டிருக்கிறாள்!

'முரசொலி'
சந்தா விபரம்

உள்நாடு-இலங்கை

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

வெளிநாடு

ஆண்டு சந்தா	7-0-0
ஆறுமாத சந்தா	4-0-0

மூன்று மாத சந்தா கிடையாது.

திராவிட சமுதாயத் துறையிலிருந்து விலகி இருக்கும் கம்யூனிஸ்ட் தோழர்கள் 20-5-55 இதழின் 'பீக்கிங் பாதை' என்ற தலையங்கத்தைப் படித்தபிறகு, அவர்களின் கொடியின் சின்னத்தை எடுத்துக் கொண்டு மதவாதிகளை மண்டியிடச்செய்வார்கள் என எண்ணுகின்றேன்.

—ஏ. கே. என். இராசன்,
திருவல்லிக்கேணி.

நமது முதல் முழக்கமான சமுதாய சங்கநாதத்தை எதிர்க்கும் இந்திய கம்யூனிஸ்டு காம்ரேடுகளுக்கு தரும் பதிலே சென்ற வார "முரசொலி"யின் தலையங்கமான "பீக்கிங் பாதை"

—மணிவேலன்,
கீழத்திருப்பூந்துருத்தி.

"செத்தும் கொடுத்தவன்" என் உள்ளத்தை கொள்ளைகொண்டு விட்டது.

ஐ. எம். சரீப்,
திருச்சி.

முரசொலியின் இறுதிப் பக்கத்தில் பதிவு எண்-ஆசிரியர்-வெளியிடுவோர்-பதிப்பாளர்— ஆகியவற்றை ஆங்கிலத்தில் குறித்திருக்கிறீர்கள். தூய தமிழில் குறித்தால் பெருமைப்படலாம்.

—ஆர். எல். மாதவன்,
திருச்சி.

உதவாக்கரை உதாரணம் தந்து மீண்டும் மன்னிப்புக் கேட்கும் மதியற்றோர் பெரிய எழுத்தாளரா? இனியாகிலும் உதாரணம் கொடுக்கத் தெரியாமல் எதையாகிலும் உளறிக் கொட்டுவோருக்கு அறிவு வருமா?

—அன்பழகன்,
கோவிந்தாபுரம்.

பொதுவுடைமை தோழர்கள் சிந்திக்கும் வரை அடிக்கும் சம்மட்டி அடிதான் சென்ற வாரத் தலையங்கம்.

—தில்லை மணாளன்,
விஜயபுரம்

கலைத்துறையில் வான்கோழிநடனமாடும் வக்ரபுத்தியினருக்கும்—சிறுநரிக் கும்பலுக்கும் வான்கோழி நடனம் நல்லபாடம் கற்பிக்கும்.

—இரா. தம்பி,
மதுரை.

தங்கள் முரசொலியில் வரும் எப்பகுதியை நிறுத்தினாலும் சரி; குறளோவியத்தை மட்டும் வாரந் தோறும் போடாமல் நிறுத்தி விடாதீர்கள்.

—எம். காதல் முத்து,
மேலூர்.

'வான்கோழி நடனம்' கட்டுரை, கடையர்களுக்கோர் சவுக்கடி.

—உரு. மணிவண்ணன்,
திருவாரூர்.

'வான்கோழி நடனம்' கட்டுரை ஆச்சாரியாரின் பாண்டித்தியத்தை எடைபோட்டுக் காட்டுகிறது.

தி. தி. பாலு.
சென்னை-5.

ஆனந்தபுரம் நித்யானந்த வாசகசாலை நிதிக்காக
திருச்சி தேவர் மன்றத்தில்
29—5—55 ஞாயிறு மாலை 6-45 மணிக்கு

ராஜேந்திரன் நாடக மன்றத்தார்

நடிக்கும் புதிய நாடகம்

புது வெள்ளம்

நடிகர்கள்:

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், குண்டு கருப்பையா, ஜெமினி செல்லம், மோகனா முதலியோர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. அலுவலகம்; 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.